# வடவை மாதா குரலொலி

**.......... ஆகஸ்ட் 2017 ..........**

ஆசிரியர் :

**மு. சேவியர் சந்திரகுமார்**

ஆசிரியர் குழு உறுப்பினர்

**டி.எம்.ஜேம்ஸ் மார்ட்டின்**

வடிவமைப்பு

**ஏ.கே.எஸ். கிரியேடிவ்'ஸ்**

(அ. காதர் மொய்தீன்)

அச்சகம்

**ஜே.எம்.பிராசசஸ்,**

இராயப்பேட்டை, சென்னை-14.

வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்

**மு. சேவியர் சந்திரகுமார்,**

1/448, பிள்ளையார் கோவில் தெரு,

கேளம்பாக்கம், சென்னை - 603 103.

(OMR) காஞ்சிபுரம் மாவட்டம்.

தொலைபேசி : 98845 38281

மின்னஞ்சல் :

**icdsxavier@gmail.com**

ஆசிரியர் உரை

## வெள்ளி விழா!

1989-ம் வருடம் தொடங்கி இன்று வரை, ஒருசில வருடங்கள் தவிர்த்து வருடந்தோறுமாக இவ்வருடத்துடன் சேர்த்து 25 வடவை மாதா குரலொலி மலர்கள் வெளி வந்துள்ளன. ஆக, இது நமது வெள்ளி விழா மலர்.

மனதில் கிடைக்கும் திருப்திதான் இதற்கான கொண்டாட்டம்!

யாரிடமும் எந்த விதத்திலும், எதையும் எதிர்பார்த்ததும் இதுவரை இல்லை!

அதிகாரம் படைத்த தனி மனிதர்கள் மற்றும் மூளை முடுக்குகளிலிருந்து புறப்படும் எதிர்ப்புகள் ஆகியவை அன்றும் இன்றும் என்றும் நம்மை பாதித்ததில்லை... இறைவனருளால்...!

ஏன் இத்தனை செலவில், தனி மனித உழைப்பாக, இந்த புத்தகம்?

வள வள, கொள கொள என்றில்லாமல் மறை உண்மைகளை நம் மக்களுக்கு நறுக்குத் தெறித்தார்போல எடுத்துச் சொல்ல எனது மனம் விழைகிறது ; ஏதோ ஒரு சக்தி வழி நடத்துகிறது; உதவுகிறது. அவ்வளவுதான்...!

மேற்சொன்னவை உண்மையா என்பதை வாசகர்களே, நீங்கள் முழுமையாக வாசித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்...

**- மு. சேவியர் சந்திரகுமார்**

ஆசிரியர்

---

**இணைய தளத்தில்**

வடவை மாதா குரலொலி

வாசகர்களே..

தொடர்ந்து.... வடவை மாதா குரலொலி பத்திரிகையை இணை தளத்திலும் கண்டு பயனடையுங்கள்.

இணையதள முகவரி

**www.vadavaimadhakuraloli.com**

அட்டை முன், பின் புகைப்படங்கள்

ஜி. சுகுணராஜ் (சுகுணா ஸ்டூடியோ)

இன்றைய இளைஞர்களுக்கு இளம் பெண்களுக்கு வேலை இருக்கிறதோ இல்லையோ, கண்டிப்பாக ஸ்மார்ட் போன் இருக்கும்.

நடுத் தெருவில் சாலையைக் கடக்கும் பொழுதான, அந்த அவகாசத்திலுங்கூட ஒருகையில் போனை, கையிலோ, காதிலோ வைத்துக்கொண்டு சாலையில் சாகசம் செய்வது போன்று அத்தனை வேகத்துடனும் சுவாரசியத்தோடும் கையாளும் கலை,

ஆக, மனிதன் தன்னையே போட்டோ எடுக்கும் ஷெல்ஃபி உலகுக்கு அறிமுகமாவதற்கு இந்த 2000ம் ஆண்டில் மட்டுமே சாத்தியமாகியிருக்கிறது.

ஆனால், 2000 வருடங்களுக்கு முன்னர் அவதரித்த இயேசு, தன்னைத்தானே ஷெல்ஃபி எடுத்துக்கொண்ட கதை தெரியுமா?

இது ''கதை'' அல்ல உண்மையின் வரலாறு..!



இன்றைய நவயுக காலத்துக்கே உரியது என்பதே உண்மை.

அதுவும் ''ஷெல்ஃபி'' என்றழைக்கப்படும் முறையில் யாருடைய உதவியுமின்றி தன்னைத்தானே போட்டோ எடுத்து அடுத்தவர்களிடம் பெருமையடிக்கவில்லை என்றால் அன்றைக்கு அவர்களுக்கு தூக்கமே வராது.

அந்த அளவுக்கு ''பேஷன்'' ஆகிவிட்டது இந்த ஷெஃல்பி..!

குருடர்களைக் காணச் செய்து, செவிடர்களை கேட்கச் செய்து, முடவர்களை நடக்கச் செய்தவர், இறந்தவர்களை உயிரோடு எழுப்பியவருக்கு ஒரு கேமராவை சடுதியில் அற்புதமாக வரச்செய்து போட்டோ எடுத்துக்கொள்ள முடியாதா என்ன?

மத்தேயு, மாற்கு, யோவான், லூக்கா எழுதிய புதிய ஏற்பாட்டு சுவிசேஷப் புத்தகங்களில் இந்த கேமரா அற்புதம் இல்லையே என்கிறீர்களா? இருக்கிறது

# உலகின் முதல் ஷெஃல்பி எடுத்துக் கொண்டவர் இயேசு..!

**உயிரற்ற இயேசுவின் உடலை, பொதிந்த போர்வை, போட்டோ பிலிம் ஆக மாறிய விந்தை..!**

**இயேசு உயிர்த்ததை விஞ்ஞானம் நிரூபிக்கும் அதிசயம்..! இன்றைய நிலவரம்..!**

என்று எடுத்த எடுப்பிலேயே கூறி ''இதோ விசுவாப் புரட்டன்'' வந்து விட்டான் என்று நீங்கள் கூறுவதற்கு நான் அவ்வளவு சீக்கிரம் இடங்கொடுத்து விடுவேனா என்ன?

சரி... விஷயத்திற்கு வருவோம்..

இயேசு ''சீ...பூம்பா...'' என்று மந்திரம் போட்டு கேமராவை வரச் செய்யவில்லை!

தாம் இறந்து கல்லறை அடக்கம் செய்யப்பட்ட கல்லறையையே கேமராகவாக மாற்றிவிட்டார்.

குழம்புகிறதா..?

எப்பொழுதுமே உண்மைக்கு உலகத்தில் மதிப்பே கிடையாது. மண்டையில் சரக்கில்லாதவன்தான் தன்னையே பெருமைப்படுத்திக் கொள்வான். நிறை குடம் தழும்பாது!

இயேசுவை இறைமகன் என்று நாம் கூறினால் அவர் சாதாரண மனிதர் என்கின்றனர் நாத்திகர்கள், புத்தர், காந்தி, இயேசு என்று மூவரையும் சேர்த்து மகான்கள் என்கின்றனர் இந்துக்கள். அவர் ''ஈசா நபி'' ஒரு இறைத்தூதர் மட்டுமே... என்கின்றனர் இஸ்லாமியர்கள். ஆனால் சர்வ வல்லமையுடைய தேவன் நிறைகூடம் போன்று தழும்பாமல் தனது காரியத்தை சாதித்து விட்டுப் போய் விடுவார் என்பதுதான் உண்மை''

ஏனென்றால், அண்ட சராசரங்களையும் தனது ஒரே வார்த்தையால் சிருஷ்டித்தவரல்லவா அவர்.

சரி.. காமிரா கதைக்கு வருவோம்!!

வேதாகமம் கூறுவதை முதலில் பார்ப்போம்...

''யோசேப்பு இயேசுவின் உடலைப்பெற்று தூய்மையான மெல்லிய துணியால் சுற்றி, தமக்கெனப்பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டுபோய் வைத்தார்'' ( மத்தேயு 28:29 )

''இயேசுவின் கல்லறையை அடைந் அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைப் பார்த்தார்... இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார், அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.'' (யோவான் : 20: 5-7)


மேற்சொன்ன இந்த இரண்டு வசனங்களில் முதல் வசனம் இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தபோது அவரைச் சுற்றி போர்த்தப்பட்டிருந்த நீண்ட துணியைப் பற்றி கூறுகிறது.

அதே துணி அவர் இறந்து உயிர்த்த பின்னர் அவரது சீடர்கள் அங்கு

சென்று பார்த்தபோது அவரது சீடர்கள், ஒரு மூலையில் தனியாக சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்ற படியாக இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த துணிதான் நாம் பேசப்போகும் விஷயத்துக்கே ஆதாரம்...

அதற்கு முன்பு இன்னொரு வசனத்தையும் பார்க்கலாமே...



உருவம் மட்டுமல்ல, உள்ளுறுப்புகளும் போர்வையில் பதிந்துள்ளன

''திடீரென ஒரு பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப்புரட்டி அதன்மேல் உட்கார்ந்தார். அவரது தோற்றம் மின்னல் போன்றும், அவருடைய ஆடை உறை பனியைப் போன்றும் இருந்துது. அவரைக் கண்ட அச்சத்தால் காவல் வீரர்கள் நடுக்கமுற்று செத்தவர்போல் ஆனார்கள். (மத்தேயு 28: 2-4)

இந்த மூன்று வசனங்களில் உள்ள சம்பவங்களை சுருக்கமாகப் பார்ப்போம்...

# மாதாவின் உருவம் பதிந்த துணி...

## - உண்மைச் சம்பவம்

இயேசுவின் உடல் பதிந்த துணியைத் தொடர்ந்து, மாதாவின் உருவம் பதிந்த துணியைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

மெக்ஸிகோ நகரில்தான் அந்த அதிசயம் 1531-ஆம் வருடத்தில் நடந்தது. ஜுவான் டீகோ, 51 வயதான மிகவும் சுலந்தமான இவர் ஒருநாள் மெக்ஸிகோவிலுள்ள அவரது கிராமத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது, எங்கிருந்தோ வந்த நறுமணம் அவரை அருகிலுள்ள மலை வரை இட்டுச் சென்றது.

ராணி போன்ற தோற்றத்துடன் விவரிக்க முடியா நறுமணத்துடன் மாதா காட்சியளித்த அந்த கோலம் அவரை திக்குமுக்காடச் செய்தது. அவள் பேசிய பேச்சின் தொனி, டீகோ என்றுமே கேட்டறியாத இன்னிசையாக அவருக்குக் கேட்டது.

அவள் அணிந்த ஆடையில் நட்சத்திரங்கள் மின்னுவதையும், அவள் காலடியில் சந்திரன் இருந்ததையும் கண்டார். அவளது இரு கரமும் குவிந்த நிலையில் இறைவனை நோக்கி ஜெபம் செய்த நிலையிலிருந்தது.

இந்த தோற்றமே டிகோவுக்கு மாதாவின் செய்தியை உணர்த்தியது. உலகத்தின் அதிசயங்களான நட்சத்திரங்களையே ஆளுகின்ற அரசியாக அதே நேரத்தில் மெக்ஸிகோ மூதாதையினர் வணங்கி சந்திரனையே தனது காலில் மிதித்தவளாக காட்சியளித்த விதம் அனைத்துக்கும் மேலானவைகளாக உணர்த்தியது.

அதே நேரத்தில், இறைவனை நோக்கி கரம் குவித்ததன் மூலம் தான் சாதாரண மானவள் என்பதையும் இயேசு ஒருவரே ஆராதனைக்குறியவர் என்பதையும் உணர்த்தியது.



மாதா கூறியது என்ன?

தனக்கு கோயிலொன்றை நிர்மாணிக்கும்படி ஆயரிடம் சொல்ல வேண்டி பணித்தாள் அந்த விண்ணக அரசி.

பாவம், ஏழைக் குடியானவனான அந்த டீகோவினால் ஆயரை திருப்திப்படுத்த இயலவில்லை.

மீண்டும் சென்றார் மலைநோக்கி! முன்னரை விட அதிக ஒளி வெள்ளத்தில் மாதா காட்சியளித்தாள். ஆயரிடம் மீண்டும் சென்று நடந்ததைக் கூற பணித்தாள் அன்னை!

ஆயரோ, வேறு மாதிரி சிந்தித்தார். ஒருவேளை மனிதர் பணம் எதிர்பார்க்கிறாரோ? பிசாசு பிடித்திருக்குமோ! வரக்கூடாத சந்தேகங் களெல்லாம் வந்தது அவருக்கு!

''ஏதாவது அடையாளம் இருக்கிறதா, காட்சி கண்டதற்கு'' என்றார் ஆயர்.

மூன்றாவது முறை காட்சியளித்த மாதாவிடம் நடந்ததைக் கூறினார் டீகோ. மாதா அவரை மலையின் உச்சிக்கு வருமாறு பணித்தாள். டிசம்பர் குளிரில் எங்குமே காணக்கூடாத அத்தனை அழகுடன், நறுமணத்துடன் கொட்டிக்கிடந்த மலர்குவியலை அள்ளுமாறு கூறினாள் மாதா!

சிறிய துணியில் முடிந்துகொண்டு தனது ஆடைகளில் அந்த துணிப் பொட்டலத்தை மறைத்தவாறே சென்று சேர்ந்தார் ஆயரிடம்.

''ஆஹா... வந்து விட்டாரா...'' என்று நினைத்த படியே நின்று கொண்டிருந்தார் ஆயர். இதோ... என்று மலர் பொதிந்த துணியை அவிழ்த்து மலரைக் கீழே கொட்டினாள் டீகோ....

மலர்கள் விழுந்தன. விழுந்தது மலர்கள் மட்டுமல்ல... அதைப் பொதிய பயன்படுத்திய அந்த சிறிய துணியும்தான். துணி மாதாவின் உருவம் பதிந்த நிலையில் அப்படியொரு அழுகுடன் காட்சியளித்தது.

''குவாடலூப் அன்னை'' என்று தான் அழைக்கப்பட வேண்டும் என்று மாதா சொல்லச் சொன்னதையும் விவரித்தார் டீகோ.

அதன்பின் நடந்துதான் தொடர் ஆச்சரியங்கள்....

டீகோ மலை ஏறுவதற்கு முன்பு வரை படுத்த படுக்கையில் சாகக்கிடந்த அவரது மாமா எழுந்து உட்கார்ந்திருந்தார்.

காட்சியின் அடுத்த விளைவு?


லட்சக்கணக்கான மெக்ஸிகோ மக்கள், மனம் மாறி கத்தோலிக்காரானார்கள்! அவர் கேட்டுக்கெண்ட படியே ஆலயம் அமைக்கப்பட்டது. உலகிலுள்ள பல மாதா திருத்தலங்களுள், மிக முக்கியமானதாக குவாடலூப் இன்றுவரை திகழ்கிறது.


மாதாவின் நோக்கம்தான் என்ன?

இதோ அவளே கூறியது....

''நானே உலகின் உண்ஷமான கடவுளின் தாயானவள். சொல்லொண்ணா துயரத்திலுள்ள மக்கள் என்னை நோக்கி வரும்பொழுது, அவர்களது கண்ணீரைத் துடைக்கவே நான் தோன்றினேன். நான் அவர்களுக்கு பரிவு காட்டி பாதுகாப்பேன். எனது மகா இரக்கம், ஆதரவு அரவணைப்பு மெக்ஸிகோ மக்கள் மட்டுமல்ல, உலக மக்களுக்கும் உண்டு''.

இன்றுவரை ஒரு சிறிதும் அழியாத அந்த மாதா உருவம் பதிந்த அற்புதத் துணி, என்றைக்கும் அவளது புகழை பறை சாற்றும் என்பதில் சந்தேகமில்லை. ●







இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தபோது அவரது உடலை தலையோடு சேர்த்து மெல்லிய துணியால் சுற்றினார்கள். அவர் உயிர்த்தெழுந்தபோது மின்னலைப் போன்ற பேரொளி தோன்றியது.

சூரியனைவிட பிரகாசத்துடன் இயேசு உயிர்த்தார்.


இந்த பிரமாண்டத்தைப் பார்த்த காவலர்கள் மயக்கமுற்று செத்தவர் போலானார்கள். அவரது சீடர்கள் கல்லறையில் அவரைப் போர்த்தியிருந்த துணி தனியாக வைக்கப்பட்டிருந்தக் கண்டார்கள்.

இப்பொழுதுதான் வருகிறது இயேசு ஷெல்ஃபி எடுத்த கதை...!

இயேசுவின் கல்லறைதான் கேமரா! அவரது உடல்தான் போட்டோ எடுக்கப்படும் உடல்! அவரைச் சுற்றியிருந்த துணியில்தான் கேமரா பிலிம்!

ஒரு கேமராவில் போட்டோ நெகட்டிவ் வடிவத்தில் எப்படி உருவம் பதிக்கிறது! கேமராவை க்ளிக் செய்தவுடனே, ஷட்டர் திறக்கிறது. பல மடங்கு ஒளி உள்ளே புகுவதால் பிலிம் நெகட்டிவாக மாறுகிறது.

இங்கே இயேசுவின் உடல் துணியால் சுற்றப்பட்டு துணியான பிலிம், கேமராவான கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது. இயேசு உயிர்த்த போது மின்னலைப் போன்ற ஒளி உள்ளே கல்லறையான கேமராவினுள் நுழைகிறது. ஒளியின் பிரமாண்டம் அதிகமானதால் இயேசுவின் உடம்பு பற்றிய படம் அப்படியே பிலிமான துணியில் பதிந்து போட்டோ நெகட்டிவாக மாறுகிறது.




அவரது உருவம் அந்தத் துணியில் கச்சிதமாகப் பதிந்து அவரது முகத்தோற்றத்தை தெள்ளத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது என கண்டுபிடித்ததையும் பிற படங்களையும் பாருங்கள்....!

ஆராய்ச்சி என்ன விளக்குகிறது..?

அவர் சிலுவையில் அறையப் பட்டபோது ஏற்பட்ட ஐந்து காயங்களும் பிலிமாக மாறிய, அதாவது பிலிமின் அம்சங்களைக் கொண்ட போர்வையில் காணப் படுகிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டில் காணப்படும் தொழில்நுட்பம் நிறைந்த கேமராவால் கூட, இயேசுவின் உடலைப் பொதிந்த துணியான பிலிம் போன்றதை உருவாக்க முடியாது. அவ்வளவு துல்லியமாக இயேசுவின் இறந்த உடல் பதிய முடிகிறது என்றால் அது ஒரு அதிசயமான ஒளி, சடுதியில் ஏற்ப்பட்டால் மட்டுமே இயலும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள்!


இந்தத் துணி ட்யூரின் நகர தேவாலயத்தில் பாதுகாக் கப்பட்டிருக்கின்ற படியால் ட்யூரின் நகர போர்வை Shroud of Turin என்று அழைக்கப்படுகிறது.


ஆம்... இதுதான் நடந்தது!


இனி ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் ஏராளமான ஆராய்ச்சி பல்கலைக் கழகங்கள், 30,000 -க்கு மேற்பட்ட போட்டோக்கள், கடந்த 125 வருடங்களாக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள், இவை என்ன சொல்லுகின்றன...?


ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக் கணக்கான புத்தகங்கள், ஆராய்ச்சி முடிவை விளக்கி இந்த விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்டுள்ளதை அருகிலுள்ள படங்களில் காணலாம்.


இந்த துணியே பொய் ; அது பெயிண்ட்டிங்; உருவாக்கப்பட்டது என்றெல்லாம் பலர் கிளம்பினார்கள்.













ஆராய்ச்சியின் முடிவில் பெயிண்டின் தன்மை இல்லை. இதுபோன்ற தன்மையுள்ள துணியைப் போலியாக உருவாக்குவது அரிது என்பன போன்ற முடிவுகள்தாம் வந்துள்ளன. ஒருசிலர் இது 500 வருடங்களுக்கு முன்னர்தாம் உருவாக்கப்பட்டது. அதுவும் வேறு நாட்டில் தயாரிக்கப்பட்டது என்றனர்.


ஆனால், ஆராய்ச்சியாளர்கள் முடிவு, துணியின் நூலிழைகள் இஸ்ரேல் பகுதியில் நெய்யப்பட்டதையும் நிரூபிக்கிறது. இந்தத் துணி உலகில் பல்வேறு நகரங்களில் இடம் மாறி மாறி வைக்கப்பட்டிருந்தாலும், அதில் ஒட்டியிருந்த மகரந்தங்கள் பற்றி ஆராய்ச்சி செய்தபோது, அது எருசலேமின் சுற்றுப்














பகுதியில் காணப்பட்ட மலர்களின் தன்மையுடனேயே இருப்பதாக கண்டு பிடித்துள்ளார்கள்.

இறைவனுடைய வழிகளோ ஆச்சரியமானது. அதுவும், அவர் விட்டுச் சென்றுள்ள இந்த ஆதாரம் எத்துணை பெரியது பார்த்தீர்களா?


ஆனால்... ஒன்று... ''கண்டு விசுவாசிப்பதை விட காணாமல் விசுவாசிப்பவனே பேறு பெற்றவன்'' என்ற இயேசுவின் கூற்று அதைவிட பெரிதல்லவா?


●














அகில உலகைப் படைத்த இறைவன், ஆதியிலே மனிதனைப் படைத்து வாங்கிக் கட்டிக் கொண்டார். ஆம், சிங்கார மான தோட்டத்தை ஆதாமுக்கு கொடுத்து அழகு பார்த்தார். அவனோ... பாவத்தில் விழுந்தான். முழு மனித குலமும் அன்று தொடங்கி நாளுக்கு நாள் பாவத்தில் முன்னேறியது.

எல்லாம் வல்ல பிதாவாகிய இறைவன் பாவத்தைப் போக்கும் வழி பற்றி யோசித்தார். விளைவு..? தனது ஒரே பேறான குமாரனையே இவ்வுலகுக்கு அனுப்பி, சாவுக்கு கையளித்து, இவ்வாறாக உலகுக்கு அன்பு கூர்ந்தார்.

இயேசுவும் வந்தார், உலகத்தை தனது மரணத்தின் மூலம் உலகை ஜெயித்தார்.

பாவம், இருள் இவற்றிலிருந்து மீளுவதற்கு இவ்வாறாக ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தார். இனி அவர் இவ்வுலகிற்கு

# ‘ரஷ்யாவை எனது மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுங்கள்’

## – பாத்திமா காட்சியில் மாதா சொன்னதன் பின்னணி....

வரப்போவது ஒரே முறைதான். அதுதான் நம்மை நடுத்தீர்க்கும் நியாதிபதியாக, உலக முடிவில்? ( ஆனால் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இயேசு பேசுவதும், நடத்துவதும் தினமும் நடந்து கொண்டுதான் வருகிறது என்பது கிறிஸ்தவர்கள் அறிந்த ஒன்று )

இதோடு எல்லாம் முடிந்தது என்று சும்மா இருக்கவில்லை அவர்!

உலகத்தினரை அவ்வப்போது செம்மைப்படுத்த, தனக்கு நிகரான ஒருவரை அனுப்ப விளைந்தார் போலும்...! அதற்கு முழுத் தகுதியுடையவர் அன்னை மேரியைத் தவிர வேறு யார் உண்டு..!

அன்று தொடங்கி இன்று வரை லூர்து நகரிலும் வேளாங்கண்ணியிலும், பூண்டியிலும், குவாடலூப்பிலும், சலேத் நகரிலும், பாத்திமாவிலுள்ள 20 இடங்களுக்குமேல் மாதா முகமுகமாய் பலருக்கு காட்சியளித்துள்ளாள். தனது பெரும்பாலான காட்சிகளில் அவள் கேட்பதெல்லாம் ஒன்றுதான்.

உலக சமதானத்துக்காகவும், தனது குமாரன் இயேசுவுக்கு இழைக்கப்படும் நிந்தை அவமானங்களுக்காகவும் மென்மேலும் பாவம் செய்து சீரழியாமலும் இருக்க வேண்டி மக்கள் ஜெபமாலை செய்ய வலியுறுத்தவே அவளது காட்சிகள் அமைந்தன.

இவ்வகையான காட்சிகளில் மிகவும் பிரசித்திப் பெற்ற காட்சிதான் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் அன்னை மேரி மூன்று சிறுவர்களுக்கு காட்சியளித்த சம்பவம்.

இன்றிலிருந்து சரியாக

## பாத்திமா மாதா காட்சி கொடுத்த நூறாண்டு நிறைவு (அக்டோபர் –13, 2017) சிறப்புக் கட்டுரை

100 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1917ஆம் ஆண்டு மே மாதம்17-ம் தேதி முதல் அக்டோபர் மாதம் 17-ம் தேதி வரையிலுமாக மொத்தத்தில் ஆறுமுறை அந்த சிறுவர் சிறுமியரான ஜெசிந்தா, பிரான்சிஸ், லூசியா ஆகியோருக்கு காட்சியளித்தாள்.

காட்சியின் முக்கிய நோக்கம் மூன்று! ஒன்று தனது குமாரன் இயேசுவின் திரு. இருதயத்துக்கு உலக மக்களால் செய்யப் படும் பாவம், நிந்தை, அவமானம் ஆகிய வற்றுக்குப் பரிகாரம் தேடுவது, இரண்டாவது தனது மாசற்ற இருதயத்துக்கு எதிராக செய்யப்படும் பாவங்களுக்கு பரிகாரம், மூன்றாவதாக ரஷ்யா தேசம் மனம் திரும்பு வதற்காக!

மாதா காட்சி கொடுத்த அந்த கால கட்டத்தில் சோவியத் கூட்டமைப்பு என்ற

பெர்லின் சுவர் இடிக்கப்பட்டு இரண்டு ஜெர்மனியும் ஒன்றானது.



பெயரில் கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், உக்ரைன், லிதுவேனியா, எஸ்டோனியா உட்பட 14 நாடுகளை தன் கம்யூனிஸ கோரப் பிடியில் உள்ளடக்கி வைத்திருந்தது. ரஷ்யா! மட்டுமல்லாது ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களில் ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோகியா, பல்கேரியா, யூகோஸ்லோவியா, ரோமானியா உட்பட மொத்தத்தில் சுமார் 27 நாடுகள் கம்யூனிஸ நாடுகளாக திகழ்ந்தன.

இந்த நேரத்தில்தான் மாதா தோன்றி ஜெபமாலை பக்தியை வலியுறுத்தினாள்.

என்ன ஆச்சரியம்..!

உலகெங்கும் ஜெபமாலை பக்தி அதிகரிக்க அதிகரிக்க ரஷ்ய கூட்டமைப்பிலிருந்த நாடுகளும் சீட்டுக்கட்டு சரிவது போல மள மளவென சரிந்தன. பிற நாடுகளான 27 நாடுகள் உட்பட மொத்தத்தில் 41 நாடுகளில் கம்யூனிஸம் இல்லாமல் போனது.

குறிப்பாக, கிழக்கு ஜெர்மனியையும், மேற்கு ஜெர்மனியையும், பிரித்திருந்த பெர்லின் சுவர், மக்களால் இடிக்கப்பட்டு உலகையே திரும்பி பார்க்க வைத்தது. (இப்போதுள்ள பிரதமர் ஏஞ்சலா மெர்கல் நல்ல கிறிஸ்தவர்)

''கம்யூனிஸ இதயம் என்றழைக்கப்பட்ட போலந்தின் ஏற்பட்ட தொழிற்சங்க புரட்சியின் விளைவாக மொத்த நாடே கத்தோலிக்க நாடாக மாறியது. இன்றைய போலந்தின் தலைவர் அண்ட்ரூஸ் டுடா, கத்தோலிக்கர். எல்லாவற்றுக்கும் மேலாக ரஷ்யாவிலுள்ள மாஸ்கோ நகரில் க்ரெம்ளின் சதுக்கத்திலிருந்த கம்யூனிஸத்தை தோற்றுவித்த பிரமாண்டமான லெனின் சிலை தகர்க்கப்பட்டது.

ஒன்றல்ல இரண்டல்ல உக்ரைன்

# மாதா சொன்ன மூன்று இரகசியங்கள்

**நிறைவேறியதா..? இல்லையா..?**
**மாதா காட்சிகளில் உண்மைத்தனம்...**

ஆறுமுறை பாத்திமாவில் காட்சியளித்த மாதா பல்வேறு இரகசியங்களை வெளியிட்டாள். அவற்றுள் மூன்று மட்டும் முக்கியமானதாகும்.

முதல் இரண்டு இரகசியங்களும் பாவிகள் நரக நெருப்பில் அமிழ்ந்து வேதனையுறுவதை மாடு மேய்க்கும் மூன்று சிறுவர் சிறுமியர் களுக்கு காட்டினாள்.

இந்த வேதனைகளிலிருந்து உலக மக்களை காப்பாற்ற திவ்ய நற்கருணை பக்தியும் ஜெபமாலை பக்தியும் அவசியம் என்பதை எடுத்துரைத்தாள்.



இரண்டாம் உலகப்போர் காட்சி

அவள் காட்சி கொடுத்த அந்த நாட்களில் முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. அதை நிறுத்துவதற்கும் மேற்கண்ட பரிகார ஜெபங்கள் தேவை என்றாள் அவள்.

''நீங்கள் ஜெபித்தால் முதல் உலகப்போர் முடியும்'' என்றாள். அதுபோலவே அடுத்த வருடமே அந்த போர் முடிவடைந்தது.

அடுத்த ஒரு இரகசியம் 2ம் உலகப்போர் விரைவில் நடைபெறும் என்பதே...

அதுபோல் 1939-ல் தொடங்கி ஏழு வருடங்கள் 2-ம் உலகப்போர் நடைபெற்றது.



மாதா சொன்னபடி, போப் ஜான்பால் சுடப்பட்டு கீழே விழும் காட்சி



தன்னை சுட்டு சிறையில் இருந்த முகம்மதலீ அக்காவை சிறையிலேயே சென்று போப் ஜான்பால் சந்தித்த காட்சி

போப்பாண்டவர் ஒருவருக்கு கொலையாளி ஒருவனால் தீங்கு நேரிடும் என்ற இரகசியத்தையும் தேவதாய் முன்னறிவித்தாள்.

அதுபோலவே, 1981-ல் போப்பாண்டவர் ஜான்பால் தனது வழக்கமான திருயாத்ரீகர் சந்திப்பை நடத்திக் கொண்டிருந்தபோது, முகம்மதலி அக்கா என்பவனால் சுடப்பட்டு சாய்ந்தார்.

உயிருக்குப் போராடிய அவரை மருத்துவ சிகிச்சை மூலம் காப்பாற்றினார். இறைவனது கரம் அவரோடிருந்த படியால் சகஜ நிலையடைந்தது. அவர் செய்த முதல் காரியம், சிறையிலே அடைக்கப்பட்டிருந்த அந்த நபரை அவனது சிறையின் அறைக்கே சென்று சந்தித்து ஆசி வழங்கினார்.

மாதாவின் காட்சியின் அடுத்த முக்கிய காரியம் ரஷ்யாவின் மனந்திருப்புதல் பற்றி!

உலகிலுள்ள சுமார் 47 கம்யூனிஸ நாடுகளுக்கும் தலையான ரஷ்யாவுக்காக இறைவனிடம் மன்றாடும்படி மாதா கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக, தனது மாசற்ற இருதயத்திற்காக ரஷ்யாவை ஒப்புக் கொடுத்தால், ரஷ்யாவை முற்றிலுமாக மனந்திருப்புவேன் அல்லது ரஷ்யா தனது தப்பரைகளை உலகமெங்கும் பரப்பி, உலக சமாதானத்துக்கு கேடு விளைக்குமென எச்சரித்தாள் மாதா!

மாதா கேட்டுக்கொண்டபடி ரஷ்யாவை பிரத்தியேகமாக, மாதாவின் இதயத்துக்கு ஒப்புக்கொடுக்க வில்லையென்றாலும் ரஷ்யா உட்பட மொத்த உலகத்தை''ம ஒப்புக் கொடுக்கும் வழிபாட்டை மூன்று போப்பாண்டவர்கள் ஆறுமுறை நடத்தியிருக்கிறார்கள்.

ஆனாலும், ரஷ்யாவை மட்டும் பிரத்தியேக முறையில் ஒப்புக்கொடுக்கும் முயற்சியில் இப்போதைய ரஷ்ய அதிபரும், சமீபத்தில் கத்தோலிக்கராக மாறியவருமான விளாடிமீர் புட்டின் பலமுறை போப்பாண்டவரை சந்தித்து வருகிறார் என்பதே இப்போதைய செய்தி!



ரஷ்யாவை மாதாவின் திருஇதயத்துக்கு ஒப்புக்கொடுத்தல் சம்ப-ந்தமாக போப் பிரான்சிஸ் ரஷ்ய அதிபர் புடின சந்திப்பு,

ஆனால், ஏனோ இந்த முயற்சி இன்னும் முழுமையாக பலனளிக்கவில்லை.

ஆக, மாதா ஆரம்பித்து வைத்த பக்தி முயற்சிகளின் பலனாக அவள் காட்சிக் கொடுத்து 100 ஆண்டுகள் முடிவடையப்போகும் இன்றைய காலக்கட்டத்துக்குள் மொத்தமிருந்த கம்யூனிஸ நாடுகளுள் 46 நாடுகள் கம்யூஸத்தை மறுத்து ஜனநாயகத்துக்கு திரும்பி விட்டது என்பதே ஒரு மெகா அதிசயமாகும். இது மாதாவின் மகிமையையே காட்டுகிறது. ஆனால் மாதா காட்சியின் மூன்றாவது ரகசியத்தின் சாராம்சம் என்ன தெரியுமா?

**உலகம் தோன்றியது முதற்கொண்டு இதுவரை பார்த்திராத கலவரங்கள், பேரழிவுகள், கத்தோலிக்க திருச்சபையில் வேதனைகள், இவையனைத்தும் ஏற்படும் என்பதே அந்த செய்தி!**



கம்யூனிஸ பிதா லெனின் சிலை உடைக்கப்படுகிறது.

தேசத்தில் எங்கெல்லாம் லெனின் சிலைகள் இருந்தனவோ அங்கெல்லாம் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கூடி ஆரவாரங்களுக் கிடையில் விளாடிமிர் லெனின் சிலைகள் உடைக்கப்பட்டன.

எந்த அளவுக்கு மக்களுக்கு கம்யூனிஸம் மீது வெறுப்பு ஏற்பட்டது என்பதை மேற்கண்ட 41 நாடுகளின் மாற்றமும், மக்களின் எழுச்சியும் காட்டுகிறதல்லவா? இப்பொழுது மீதமிருக்கும் கம்யூனிஸ நாடுகள் சீனா, வடகொரியா, வியட்நாம், லேபாஸ், க்யூபா உட்பட ஒருசில நாடுகள்தான் இன்றைய கால கட்டத்தில் உலகிலேயே கம்யூனிஸ நாடுகளாக உள்ளன..!

மாதா காட்சியின் பலன் இத்தோடு முடிவடைந்ததா என்றால் அதுதான் இல்லை..!

சரியாகச் சொன்னால் மாதா கேட்டுக் கொண்டபடி ரஷ்யா முழுமையாக மரியாளின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படவில்லை என்றே கூறலாம்.

1942-ம் வருடம் தொடங்கி 1984 வரை மூன்று போப்பாண்டவர்கள் சுமார் ஆறு முறை அகில உலகத்தை மரியாளின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக் கொடுத்தார் களேயொழிய, ரஷ்யாவை மட்டும் பிரத்தி யேகமான முறையில் ஒப்புக் கொடுக்க வில்லையே என்ற குறை இன்றும் உள்ளது.

இதற்கிடையில் கம்யூனிஸத்தின் வீழ்ச்சியின் பலனாக, இன்றைய உலகில் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு இணையாக உலகை அசைத்து வரும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கத்தோலிக்கராக மதம் மாறினார்.

மாதாவுக்கு ரஷ்யாவை ஒப்புக் கொடுக்கும் முயற்சியாக பலமுறை போப்பாண்டவரை புட்டின் சந்தித்து வருகிறார் என்பதே இன்றைய செய்தி!

பாத்திமா மாதாவின் காட்சிகளுள் இருந்த மூன்று இரகசியங்களுள் மூன்றாவது இரகசியத்தை வெளிப்படையாக அறிவிக்க மேற்படி ஆறு காட்சிகளில் பங்குபெற்று சமீபத்தில் இறைவனடி சேர்ந்த சகோதரி ஜெசிந்தாவே தாமதப்படுத்தினார் என்பதே உண்மை.

ஏனென்றால், உரிய காலத்தில் அறிவிக்கும்படி தன்னை மாதா உணர்த்தி வருவதாக ஜெசிந்தா கூறினார். ஜெசிந்தா இறப்பதற்கு முன்னால் போப்பாண்டவர்



புட்டின் – போப் பிரான்சிஸ் சந்திப்பு

வலியுறுத்தியதன் பேரில் மேற்படி மூன்றாம் காட்சி பற்றி தனது கைப்பட எழுதி சீல் வைக்கப்பட்ட கவரை ஜெசிந்தா உலகுக்கு வழங்கினார்.

அதை வாங்கிய போப்பாண்டவர் கூட மேற்படி இரகசியத்தில் ஒரு சில பகுதிகளை மட்டுமே வெளியிட்டுள்ளதாக ஒரு செய்தி உள்ளது.




ஆனால், மொத்த சாரம்சமான பாத்திமா இரகசியம் இதுதான்!

''உலகமே பார்த்திராத கலவரங்கள், பேரழிவுகள், அப்போது வரும்... தாய் திருச்சபை சொல்ல இயலா துயரத்தை சந்திக்கும்'' என்பதே!

மேற்கண்டவற்றின் அர்த்தத்தைப் பற்றி பேசவோ, விவாதிக்கவோ, திருச்சபை தயாராக இல்லை! திருச்சபை கேட்பதெல்லாம் ஜெபம்... ஜெபம்... ஜெபம்தான்...! அனைத்துக்கும் மருந்து ஜெபம்தான் என்பதுதானே திருச்சபையின் போதனையாக இருக்க முடியும்! அதுவே மாதாவும் தனது காட்சியின மூலம் தெளிவுபடுத்தியதாகும்.!

ஆனால்....

உலகத்தில் இப்பொழுது பரவலாக பேசப்படும் ஒன்று மூன்றாவது உலகப்போர் விரைவில் ஏற்படப்போகிறது என்பதே! தற்போதைய சூழ்நிலைகளைப் பார்த்தால் இந்த செய்தி உண்மையோ என்றுதான் தோன்றுகிறது.

அமெரிக்க அதிபர் டிரம்பின் நடவடிக்கைகள் இதை ஓரளவு உறுதிப்படுத்து கிறது.

சிரியாவும், ஈராக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளினால் நசுக்கப்படுவதும் ரஷ்யாவின் தலையீடும் ஒருபுறம்... இந்த போரின் உக்கிரத்தின் அளவு கடந்த ஆறு வருடங்களில் இந்த நாடுகளை விட்டு சுமார் ஒன்றரை கோடி பேர் இடம் பெயர்ந்த சம்பவங்கள் மற்றும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இறந்த சம்பவங்கள் மூலம் தெரியவரும்.

அரபு நாடுகளிலேயே மிகவும் வறுமையுடன் திகழும் ஏமன் நாட்டிற்கு எதிராக சவுதி அரேபியா வரிந்து கட்டுவது மறுபுறம்.

சோமாலியாவில் உள்நாட்டு போர்கள்... இந்தியாவில் காஷ்மீர் எல்லைப் பிரச்சினை மொத்த அரபு நாடுகளில் நடைபெற்று வரும் ஓயாத சண்டைகள்! போதாததற்கு, பாகிஸ்தான், இலங்கையின் சில்மிஷங்களும் இவற்றுக்கு மறைமுக ஆதரவு கொடுப்ப தோடு, தற்சமயம் இந்தியாவுக்கு எதிராக



தனது படைகளை இந்திய எல்லைகளில் ஆங்காங்கே குவித்து வரும் சீனாவின் செயல்களும் வோறொரு புறம்.

1991-ல் ரஷ்யாவைத் தொடர்ந்து பல நாடுகளில் ஏற்பட்ட கம்யூனிஸ மாற்றத்தின் விளைவாக, தற்சமயம் வரை உக்ரைனில் நடந்து வரும் இரு பிரிவுச் சண்டைகள்! தெற்கு சூடானின் போர் அதிரடி!

காங்கோ, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா நாடுகளில் இதுவரை போரினால் 70,000 க்கு மேற்பட்டோர் இறந்து பட்ட நிலை! ஏராளமான வகையில் அணு ஆயுதங்களை அளவுக்கு மீறி குவித்து வரும் வட கொரியாவின் செயல், எருசலேமில் அல்-அக்சர் மசூதியை முற்றிலுமாக இஸ்ரேல் ராணுவக் கட்டுப்பாடுகளிலிருந்து மீட்பதற்கான பாலஸ்தீன முஸ்லிம்களின் தொடர் போராட்டங்கள்...

இவையெல்லாம் மூன்றாம் உலகப் போருக்கு வித்திட்டு விடுமோ என்ற அச்சமே இன்றைய காலக்கட்டத்தில் உலகெங்கும் நிலவுகிறது.

இதற்கிடையில் சமீபத்தில் நடந்த அமெரிக்க தேர்தலில் ஹிலாரி கிளிண்டனே வெற்றி பெறுவார் என்ற நிலையில் ட்ரம்பு தான் வெற்றி பெறுவார் என்று அடித்துக் கூறிய கடவுளின் தூதா என்று தன்னையே கூறிக்கொள்ளும் கொரோசிகா வில்லேகாஸ் என்பவர் கூறுவது பீதியை ஏற்படுத்துகிறது.

2017-ம் வருடம் மே மாதம் 13 தேதியோ, அதற்கு முன்னரோ மூன்றாம் உலகப்போர் ஏற்பட்டே தீரும் என்று அடித்துக் கூறுகிறார் இவர். 2017 மே மாதம் 13-ம் தேதி ஞாபகமில்லையா..?

பாத்திமா மாதா காட்சி கொடுத்த நூறு ஆண்டின் நிறைவு தினந்தான் இந்த 2017 மே மாதம் 13-ம் தேதி. ஜெபிப்போம். ●

இடையர் சிறார்களின் மாதா காட்சியின் விபரங்களை பலமுறை கத்தோலிக்க மத குருமாரிடம் காட்சியைக் கண்ட பிரான்சிஸ், ஜெசிந்தா, லூசியா ஆகியோர் எடுத்துரைத்த வண்ணமிருந்தார்கள்.

ஆனால், இவற்றை நம்புவதற்கு ஆளில்லாமல் போனதுதான் சோகம். மாதாவிடம் இதனை எடுத்துச் சொன்னார்கள். ஒருமுறை இந்த சுமார் 9 வயதே நிறைந்த இந்த குழந்தைகள் ''நாங்கள் மோட்சத்துக்கு செல்லுவோமா'' என்று கேட்டார்கள். அதற்கு மாதா உங்களுள் இருவரை நான் சீக்கிரம் மோட்சத்துக்குள் இழுத்துக் கொள்வேன் என்றார். அதுபோல் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் பிரான்சிஸ், ஜெசிந்தா ஆகியோர் இறைவனடி சேர்ந்தார்கள்.

ஆக, மாதா மொத்தத்தில் காட்சி கொடுத்த ஆறு வேளைகளிலே பல இரகசியங்களை தாய் திருச்சபைக்குக் கூறும்படி பணித்தார்கள்.

அன்னையின் இறுதிக் காட்சிதான் மிகவும் அற்புதமானது. ''குறிப்பிட்ட நாளில் எல்லோரும் வந்து அந்த அதிசயத்தைப் பாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தாள் மாதா!

மாதா கேட்டுக்கொண்டபடி, 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் நாள் கோவா தா ஈரியா என்ற இடத்தில் சுமார் எழுபதாயிரம் மக்கள் கூடியிருந்தார்கள். அப்போது



மாதாவின் காட்சி கண்ட
ஜெசிந்தா, பிரான்சிஸ், லூசியா

# பாத்திமா மாதா காட்சிகளில் சுவாரசியம்



மாதாவின் காட்சியின்போது சூரியன்
நடனமாடியதை கண்ட கூட்டத்தின் ஒரு பகுதி





O MILAGRE DE FÁTIMA

Varios aspectos do povo ajoelhado e orando no momento de descobrir o sol e de se dar o fenomeno que tanto impressionou a multidão.

(Carta a alguem que pede um testemunho insuspeito).

Quebrando um silencio de mais de vinte anos e com a invocação dos longinquos e saudosos tempos em que convivemos n'uma fraternal camaradagem, iluminada então pela fé comum e fortalecida por identicos propositos, escreves-me para que te diga, sincera e minuciosamente, o que vi e ouvi na charneca de Fátima, quando a fama de celestes aparições congregou n'aquele desolado ermo dezenas de milhares de pessoas mais sedentas, segundo creio, de sobrenatural do que impelidas por mera curiosidade ou receosas de um logro... Estão os catolicos em desacordo sobre a importancia e a significação do que presencearam. Uns convenceram-se de que se tinham cumprido prometimentos do Alto; outros acham-se ainda longe de acreditar na incontroversa realidade de um milagre. Foste um crente na tua juventude e deixaste de sel-o. Pessoas de familia arrastaram-te a Fátima, no vagalhão colossal d'aquele povo que ali se juntou a 13 de outubro. O teu racionalismo sofreu um formidavel embate e queres estabelecer uma opinião segura socorrendo-te de depoimentos insuspeitos como o meu, pois que estive lá apenas no desempenho de uma missão bem dificil, tal a de relatar imparcialmente para um grande diario, *O Seculo*, os factos que diante de mim se desenrolassem e tudo quanto de curioso e de elucidativo a eles se prendesse. Não ficará por satisfazer o teu desejo, mas decerto que os nossos olhos e os nossos ouvidos não viram nem ouviram coisas diversas, e que raros foram os que ficaram insensiveis á grandeza de semelhante espectaculo, unico entre nós e de todo o ponto digno de meditação e de estudo ..

* * *

O que ouvi e me levou a Fátima? Que a Virgem Maria, depois da festa da Ascenção, aparecera a tres crianças que apascentavam gado, duas mocinhas e um zagalete, recomendando-lhes que orassem e prometendo-lhes aparecer ali, sobre uma azinheira, no dia 13 de cada mez, até que em outubro lhes daria qualquer sinal do poder de Deus e faria revelações. Espalhou-se a nova por muitas leguas em redondeza; voou, de terra em terra, até os confins de Portugal, e a roma-

மாதா காட்சி பற்றிய பத்திரிகை செய்தி

தேவதாய் காட்சியளித்து என் மகிமைக்கென்று ஓர் ஆலயம் அமையுங்கள் என்றாள். இதைச் சொன்னவுடன், அன்னை தன் கரங்களை விரிக்க, அதிலிருந்து பேரொளி புறப்பட்டு மேலே சூரியனை நோக்கி வீசியது.

கூடியிருந்த மக்கள் கூட்டம் சூரியனைப் பார்த்தது. சூரியன் திடீரென்று நடுங்க ஆரம் பித்தது. வேகமாக தன்னையே சுழற்றி சுலற்றி நடன மாடியது. இந்த நடனம் பல நிமிடங்கள் நீடித்தன. அனை வருமே பயந்த நிலையில் பரவசமாகப் பார்த்துக் கொண்டிருநதார்கள். அதே நேரத்தில், குழந்தைகள் மட்டும் மூன்று காட்சிகளைக் கண்டார்கள். முதல் காட்சியில் தேவமாதாவுடன் இயேசுவும், சூசையப்பரும் காணப்பட்டார்கள். அவர்கள் உலகை ஆசிர்வதித்தார்கள்.

இரண்டாம் காட்சியில் இயேசுவும், வியாகுல மாதாவும் காட்சி தந்தார்கள். மூன்றாம் காட்சியில் தேவ அன்னை தலையில் வெற்றிமுடி சூடி பரலோக அன்னையாக, பூலோக அரசியாக, மடியில் இயேசு திருக்குழந்தையை வைத்திருப்பது போன்று காட்சியளித்தார்கள்.

# பாத்திமாவில் போப்பாண்டவர் - பட ஆல்பம்

போர்ச்சுக்கல் தேசத்தில் உள்ள பாத்திமா நகரில் மாதா காட்சியைக் கண்ட மூவருள், இருவருக்கு சமீபத்தில் பாத்திமாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புனிதர் பட்டம் வழங்கியபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்















“கிறிஸ்தவர்கள் இல்லையென்றால், உலகமே இல்லை'' என்றபடி உள்ளே நுழைந்தாள் அன்னம்மா அக்கா!

“என்னக்கா, பீடிகை பலமாக இருக்கிறதே... என்னாயிற்று உனக்கு'' என்றாள் டயானா.

“தேடி வந்தவளுக்கு காபி... டீபி... எதுவுமில்லையா'' என்றபடி சேரை இழுத்துப் போட்டு

உட்கார்ந்தாள் அன்னம்மா!

“இதோ.... ஒரு நொடியில்...''

- எழுந்திருக்கப்போன டயானா அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

கரண்ட் கட்..!

“சிறிது மணிநேரத்தில் வேர்த்து விறு விறுத்து விட்டது இருவரது உடம்பும்...!

அன்னம்மா அக்கா விடவில்லை... “பத்து நிமிஷம் கரண்ட் இல்லையென்றால்.,... என்னடா உலகம்“ என்கின்றாய். அன்னைக்கு ஒருநாள் இதேபோல், நாள் முழுவதும் கரண்ட் கட் ஆனதும், சீரியல் பார்க்க முடியவில்லை. தொலைக்காட்சியில்'' என்று அலுத்துக் கொண்டாய், கைபேசியில் வைத்து, அதை நோண்டியாவது பொழுது போகலாமென்றால், “சார்ஜ்'' தீர்ந்து விட்டது என்றாள்...''

“சரி... அதற்கு... என்ன...'' சற்று

# ‘கிறிஸ்தவர்கள் இல்லையென்றால் இன்றைய உலகமில்லை’

ஆச்சரியங்களின் தொகுப்பு



- மு. சேவியர் சந்திரகுமார்

அழுத்தமாகவே கேட்டாள் டயானா...

“அப்படி வா... வழிக்கு! கிறிஸ்தவர்கள் இல்லையென்றால் உலகமே இல்லை...” மறுபடியும் பழைய பல்லவியைப் பாடினாள் அன்னம்மா..

எனக்கா....

“இன்னைக்கு மாத்திரமென்ன? ஒரு மணி நேரமாகியும் கரண்ட் வரலையே... அன்றைக்கு என்ன, இன்றைக்கும் அதே கதைதான். உலகமே வெறுத்துப் போயிடும் போல, இப்படி அடிக்கடி கரண்ட் “கட்’ ஆச்சுன்னா..!” என்று அலுத்துக் கொண்டாள் டயானா.”

“சம்பந்தம் இருக்கு... அது இல்ல... இது இல்லன்னு புலம்புறியே, நீ எதையெல்லாம் இல்லைன்னு சொல்றியோ அவையெல்லாம் இருக்கும் படியாக ஒன்று விடாம அத்தனையையும் கண்டு பிடிச்சு உலகத்துக்கு குடுத்ததே முழுக்க முழுக்க கிறிஸ்தவர்கள்தான்” என்றாள் அன்னம்மா.


“மெய்யாலுமா அக்கா” என்று டயானா வாயைப் பிழக்கவும், கரண்ட் வரவும் சரியாயிருந்தது!

“இப்ப கரண்ட்இல்லன்னு பதறினியே, இந்த மின் விளக்க கண்டு பிடிச்சதே ஒரு கிறிஸ்தவர்தான்...

அவர்தான் தாமஸ் ஆல்வா எடிசன்”

“அப்படியா..!”


“அப்படித்தான்! இன்னைக்கு காதுக் கினிய பாடல்கள், ஒலிகள் ரெக்கார்ட் பண்ணி கேட்கிறோமே அதையும் அவர்தான் கண்டு பிடிச்சார். நிமிடத்துக்கு நிமிடம் ரிமோட் வச்சி சீரியல் மாத்துறியே அந்த தொலைக்காட்சிப் பெட்டியில் ஆரம்பித்து வான மண்டலத்தில் சாட்லைட்



**திக்குவாய் :** ஒரே சிந்தனையில் இல்லா தவர், படிப்பு மண்டையில் ஏறவில்லை, ஆசிரியரிடம் சண்டையிட்டு, படிப்பை பாதியிலேயே விட்டு விட்டு ஓடியவர். (இவர்தான் 1300 கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர்.) யார் அவர். அவர்தான் **தாமஸ் ஆல்வா எடிசன்.**

## தமது நிறைவை வெளிப்படுத்த பலவீனமானதையே கடவுள் தெரிந்து கொண்டார் என்பது உண்மையா?


- அரியவற்றை கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் பலவீனங்களின் பட்டியல்




**ஊமை :** மூன்று வயது வரை ஊமை, பத்து வயது வரை எழுத, பேச முடியாதவர், எந்த வேலையையும் ஆமை வேகத்தில் செய் தவர். (இவர்தான் அணுவைப் பற்றிய உண்மைகளை உலகுக்கு தெரியப்படுத்தியவர்) அவர்தான் **ஆல்பர்ட் ஈன்ஸ்டைன்**




**நொண்டி :** நடக்க முடியாத நொண்டி. (கலிலியோ, ஈன்ஸ்டைன், நியூட்டன் போன்றோரை ஒப்பிடுமளவுக்கு உயர்ந்தவர்) அவர்தான் **ஸ்டீபன் ஹாக்கின்ஸ்.**




**ஊதாரி :** கணிதம் என்றால் இவருக்கு எதிரி. பணப்பெருமை, வீண் ஆடம்பரம் ஆகியவற்றில் திளைத்தவர். (உலகம் தோன்றிய விதமான பரிணாமக் கொள்கையைக் கண்ட பிடித்தவர்) அவர்தான் **சார்லஸ் டார்வின்.**



**மக்கு :** கணிதம் இவருக்கு சுத்தமாக பிடிக் காதது. அவர் இறக்கும் வரை அவர் தலையில் ஏறாத ஒன்று இதுதான். (தொலைபேசியை கண்டு பிடித்தவர்) அவர்தான் **அலெக்ஸலண்டர் க்ரஹாம்.**



**மந்தபுத்தி :** ஆரம்பப் பாட சாலையிலே படிப்பை இடையில் நிறுத்தியவர் (மின்சார மோட்டாரைக் கண்டுபிடித்தவர்) அவர்தான் **மைக்கேல் பாரடே.**



**படிப்பறிவில்லாதவர் :**

கல்வியறிவில்லாத துறவி (பரம்பரை குணவியல் மற்றும் அதன் தாக்கத்தை கண்டுபிடித்தவர்) அவர்தான் **க்ரஹாம் மெண்டல்.**

மிதக்கிறதே... அதுவரை, அதாவது வான மண்டல கோள்களின் உண்மைகளைக் கண்டு பிடித்தவர்களும் கிறிஸ்தவர்கள்தான்! கலிலியோ, சர்ஐசக் நியூட்டன், தாமஸ் ஆல்வா எடிசன் ஆல்பர்ட், ஐன்ஸ்டின், பெஞ் சமின் பிராங்ளின், இவங்க இல்லைன்னா நாம இன்னைக்கு இப்படி இல்லை'' என்றாள் அன்னம்மா!

"அடி... ஆத்தி...''

"இன்னைக்கு வான மண்டலத்துக்கு விண்கலங்கள் அனுப்ப முடியுதுன்னா அது யாரால...? அணுவைக் கண்டுபிடிச்சி... அதன் சக்தியை நல்ல வகைக்கும் பயன்படுத்த முடியுதுன்னா, அந்த அளவுக்கு விஞ்ஞானம் பெருகிக் கிடக்குதுன்னா, ஆல்பர்ட் ஐன்ஸ்டின் கண்டுபிடிச்ச "ரிலேட்டிவிட்டி தியரி'' என்கின்ற கோட்பாடு காரண மாகத்தான்...''

"அக்கா... இதுபற்றி கொஞ்சம் விளக்கமா சொல்லுக்கா'' என்றாள் டயானா.

"சரி... சரி... எனக்கு வேலையிருக்கு எங்கிட்ட இதுபற்றி நிறைய குட்டிப்புத் தகங்கள் இருக்கு... ஒரு எட்டு... வீட்டுக்குப் போயி கொண்டாறேன்...''

"சரி... அக்கா... நீ வருவதற்குள் நான் காப்பி கலந்து வைக்கிறேன்'' என்றாள் டயானா.

எதிர் வீட்டுக்குச் சென்று ஒன்றிரண்டு புத்தகங்களை அன்னம்மா எடுத்து வரதுக் கும், டயானா காபி கலந்து வைப்பதற்கும் நேரம் சரியாக இருந்தது.

"இதப்பிடி! நான் பெறகு வர்றேன்...'' என்றபடி நடையைக் கட்டும்போதே அன்னம்மா, டயானா கைகளில் சிறுவருக் கான சில குட்டி புத்தகங்ளை திணித்தாள். "நான் சாயங்காலம் வர்றேன்''

சாயுங்காலம் அன்னம்மா வந்தாள் பார்த்தால், குறட்டை விட்டு நல்ல தூக்கத்திலிருந்தாள் டயானா.

குரல் கேட்டு எழும்பி உட்கார்ந்த டயானா முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பு வெளிச்சம்!!

“அக்கா நீங்க கொடுத்த புத்தகங்கள் சூப்பர்னா சூப்பர்! நூற்றுக்கணக்கான விஞ் ஞானிகள் பற்றி அவ்வளவு அற்புதமாக எழுதியிருக்காங்க, அவங்கள்ல, முக்கால்வாசி பேர் கிறிஸ்தவர்கள்!'' என்ற டயானா, அதன்பின்னர் சொன்னவையெல்லாம் ஒரே சொற்பொழிவு ரகம். அவள் சொல்ல சொல்ல... அன்னம்மா ஆச்சரியத்தில் ரசித்தபடி இருந்தாள்:-

கத்தோலிக்க கிறிஸ்தவரான கோப்பார் நிக்கஸ் வானத்திலுள்ள நட்சத்திர மண்ட லங்களைத் துல்லியமாக உலகுக்கு அறிவித் தவர்! அவரது மாமா, ஒரு கிறிஸ்தவ பிஷப். அவருடைய உதவி கோப்பர் நிக்கசுக்கு கிடைத்தது.

கடவுளின் மனிதர் என்று சொன்னால், அது ஜோகன் கெப்ளர்தான்!. வான மண்டலங் களிலுள்ள பல்வேறு கிரகங்களின் அசைவுகளின் அளவைத் துல்லியமாக கணித்தவர் இவரே. விஞ்ஞான உண்மை களை அவர் கண்டுபிடிக்க, கிறிஸ்துவின் மேல் அவர் கொண்ட பாசம் அதிகரித்துக் கொண்டே வந்தது. ப்ராட்டஸ்டேன்ட் சபையைச் சேர்ந்த இவருக்கு, கத்தோலிக் கத்தின் மேல் நல்ல ஒரு ஈர்ப்பு இருந்தது. மொத்தத்தில் நல்ல கிறிஸ்தவர் என்றால், அது அவர்தான்.

துறவியர் மடத்தில் சேர்ந்து வாழ்நாளைக் கழித்தவர்தான் கலிலியோ கலிலி. ஒருநாள், சர விளக்குகள் காற்றில் ஆடுவதைப் பார்த்தார். வேகமாகவும் மெதுவாகவும்

**ஃப்ரான்ஸிஸ் காலின்ஸ் :**

( டி.என்.ஏ.வைக் கண்டுபிடித்தவர் )




''டி.என்.ஏ. என்பது கடவுள் அவரது மொழியில், ஒவ்வொரு உயிரினங்களிலும், அதனைப் பற்றி எழுதி வைத்திருக்கும் உண்மைகள்''

## கடவுள் இருக்கிறாரா..!

### நோபல் பரிசு விஞ்ஞானிகள் கூறுவதென்ன?

**ஆல்பர்ட் ஈன்ஸ்டின்**




(அணுவின் அடிப்படைக் கோட்பாட்டைக் கண்டுபிடித்தவர்)

''கடவுளில்லாத விஞ் ஞானம் நொண்டியைப் போன்றது ; விஞ் ஞானமில்லாத கடவுள் குருடனைப் போன்றது''

**சார்லஸ் டார்வின் :**


(பரிணாமத்தைக் கண்டுபிடித்தவர்)



''கடவுள் இல்லை என்று நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன். பரிணாமக் கொள்கை என்பது கடவுள் நம்பிக்கையைச் சார்ந்தே உள்ளது''

**ரானே டெஸ்கார்ட்டஸ்**

(தத்துவஞானி, பிரபல கணித வல்லுநர்) ''கடவுளைப் பிரதானமாகக் கொண்ட அமைப்பே நான் விரும்புவது''






**ஜோகன் கெப்ளர் :**
(வான்வெளி ஆராய்ச்சியாளர்)
''எனது குறைந்த அறிவுத்திறமை மூலம் கடவுளின் அதிபயங்கரமான படைப்புகளைப் புகழ்கிறேன்''

**சர் ஃப்ரான்சிஸ் பேகன்**
( தத்துவ விஞ்ஞானி )
''குறைந்த தத்துவ அறிவு நாத்திகத்தை நோக்கியும் மிகுந்த தத்துவ அறிவு ஆதிக்கத்தை நோக்கியும் நம்மை இட்டுச் செல்லுகிறது''






**சர் ஐசக் நியூட்டன் :**
(புவி ஈர்ப்பு விசையைக் கண்டு பிடித்தவர்) ''நாம் அறிந்தது மழை நீரின், சொட்டு போன்றது!. அறியாததோ, கடலைப் போன்றது. சர்வ வல்லவரான ஒருவரால் மட்டுமே, இந்த அளவு திட்டமிட்ட வழிமுறைகள் கொண்ட இந்த பிரபஞ்சத்தைப் படைத்திருக்க முடியும்.''

காற்றின் வேகத்தைப் பொறுத்து அவை, ஆடுவதைப் பார்த்தார், யோசித்தார்.

விளைவு? கடிகாரத்தைக் கண்டுபிடித்தார்!

பூமி சூரியனைச் சுற்றுவதையும் அதன் சுழற்சியின் வேகத்தைப் பொறுத்து கடல் நீரின் அளவு மாறுவதையும் கண்டுபிடித்தார். வானத்தை ஆராயும் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.

சூரியனிலுள்ள கரும்புள்ளிகள், நிலவிலுள்ள மலைகள், பள்ளங்கள், நிலவின் வடிவம் ஒழுங்கான உருண்டையல்ல,




வியாழன் கிரகத்தைச் சுற்றியுள்ள 3 நிலவுகள்... இப்படி வான மண்டலத்தை விலா வாரியாக விவரித்தவர் கலிலியோ.

"நான் கண்டுபிடிக்கும் அனைத்துக்கும் காரணம், கடவுள் என்னை ஆசிர்வதித்தது தான்'' என்று இறைவனை புகழ்ந்தவர் கலிலியோ. இவர் கத்தோலிக்கர்.

தான் இறக்கும் வரை கடவுளைப் பற்றிப் பிடித்தவர். ரானே டெஸ்கார்ட்டஸ் என்ற விஞ்ஞானி. கத்தோலிக்கரான இவர், தனது தத்துவக் கண்டுபிடிப்புகள் அனைத்துக்கும் "கிறிஸ்துதான்'' மையம் என்று வாழ்ந்தவர் இவர். நவீன கால தத்துவத்தின் தந்தை என்று போற்றப்படுபவர்தாம் இவர்!

வெற்றிடத்தின் தன்மை மற்றும் காற்றின் அழுத்தம் போன்றவற்றை ஆராய்ந்து உலகின் முதல் கணக்கிடும் கருவியைக் கண்டு பிடித்தவர் ப்ளேஸ் பாஸ்கல், அவர் இறக்கும்போது சொன்ன கடைசி வார்த்தை “கடவுள் என்னைக் கைவிட மாட்டார்’’ என்பதே.


ஐசக் நியூட்டன் இல்லையென்றால் இன்றைய பௌதிகம் இல்லை. பௌதிகத்தின் முதல் முக்கிய மூன்று விதிகளைக் கண்டு பிடித்தவர்தாம் “நியூட்டன்’’ இவரைத் தெரிந்தவர்கள் இவரைப் பற்றி கூறுவது “விஞ்ஞானத்தின் மனிதன்... கடவுளின் மனிதர் என்பதே.

ராபர்ட் பாயில்! இவர் ஒரு தத்துவ மேதை. பௌதிகம், இயற்பியல் ஆகிய வற்றிலும் ஆராய்ச்சி செய்தவர். வாயுக்கள் பற்றி அறியவற்றைக் கண்டுபிடித்து அவரது பெயரிலேயே “பாயில்ஸ் விதி” என்று அழைக் கப்படக்கூடிய அளவில் உயர்வு பெற்றவர். ப்ராட்டஸ் டேண்ட் சபையைச் சேர்ந்தவர். அறிவியல் துறையில் எவ்வளவுதான் உயர்ந்தாலும் இறை வனை மகிமைப் படுத்தியவர், வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டை முதன் முதலில் ஐரிஷ் மற்றும் துருக்கி மொழிகளில் மொழி பெயர்த்து சமயப்பணி செய்தவர்.

மின்சாரம் இல்லாத நேரங்களில் நாம் பயன்படுத்தும் மின் இயக்கி மோட்டாரைக் கண்டு பிடித்தவர் பாரடே. கண்ணுக்கு தெரிகின்ற வகையில் இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களை ஆராய்ந் தால், கண்ணுக்குப் புலப்படாதவை வெளிப் படுகின்றவிதமே, இறைவன் இருக்கிறார் என்பதைக் நிரூபிக்கின்றது என்று அறை கூவல் விடுத்தவர் பாரடே.

உயிர்களின் உற்பத்தித் திறனைக் கண்டு

# வேதாகமம் வெளிப்படுத்தும் விஞ்ஞான உண்மைகள்...!




சாதாரண மனிதர்களாகிய நமக்கு, அறிவியலான விஞ்ஞானம் அரிதாகத் தெரியலாம். ஆனால் இறைவனுடைய பார்வையில் அது சாதாரணம்!

ஒரு குவளை நீரை ஊற்றி சாரை சாரையாகச் செல்லும் சிற்றெறும்புக் கூட்டத்தையே அழித்து விடும் மனிதனை, அதே சிற்றெரும்புக் கூட்டத் துக்கு சிந்திக்கும் அறிவு இருந்தால், அவை மனிதனைப் பற்றி என்ன நினைக்கும்?

அதுபோலதான் ஒன்றைவிட ஒன்று பெரிதாக எல்லாவற்றுக்கும் பெரியவனாக, முழு வல்லமையையும் முழு அதிகாரத்தையும் பெற்று எங்கும் வியாபித்து உலவுபவர்தாம் எல்லாம் வல்ல இறைவன்!

அவர் பரிசுத்த வேதாகமம் மூலம் தன்னை வெளிப்படுத்தியதை வாசிக்கும் சில “அறிவு ஜீவிகள்”,


இதென்ன அபத்தம் என்று ஒரு சிலவற்றைக் கோடிட்டு காட்டினாலும், அவன் ஒரு சிற்றெரும்புக் கூட்டத்தைச் சேர்ந்தவனாகத்தான் இறைவனது பார்வையில் படுவான்.

இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாருக்கும் நான் சாட்சி யாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே, எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். (திருவெளிப்பாடு 22: 18,19)

மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்...?

’’ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்’’ இவ்வாறு ஆதியாகமம் 2-ம் அதிகாரம் 7-ம் வசனம் கூறுகிறது.

ஆக, மண்ணால் உருவாக்கப்பட்ட மனிதன் மண்ணுக்குள்ள துகள்களையும் தன்மைகளை’’






இன்றைய விஞ்ஞானிகள் கூற்றுப்படி பல்லாயிரம் கோடி, ஏன் அதற்கு மேல் நட்சத்திரங்கள் உள்ளதாகக் கூறுகிறார்கள். அவை நிமிடந்தோறும் ஒளியின் வேகத்துக்கீடாக வெளிநோக்கி விரிவடைந்துகொண்டே பயணத்தைத் தொடர்கின்றன. இவையனைத்தும் எவ்வாறு சாத்தியமாகிறது.

ஆக, இந்த வானத்தின் விரிவைப் பற்றி வேதாகமம் ஏதாவது கூறுகிறதா?

''அவரே தம் ஆற்றலால் மண்ணுலுகைப் படைத்தார். தன் ஞானத்தால் பூவுகை நிலை நாட்டினார். தன் கூர்மதியால் விண்ணுலகை விரித்தார்'' (ஏரேமியா 10:12) ''எண்ண முடியாத விண் மீன்களையும், அளக்க முடியாத கடல் மணலையும் போல, எனது ஊழியன் தாவிதின் வழி மரபினரையும் நான் பெருகச் செய்வேன்'' (ஏரே. 33:2)

இன்றிலிருந்து சுமார் 400 வருடம் முன்னர் தான் ப்ளேஸ் பாஸ்கல் என்பவரால் காற்றுக்கு கனம் மற்றும் அழுத்தம் உண்டு என்பதை பாஸ்கல் விதி மூலம் உலகுக்கு தெரியப்படுத்தினார்.

ஆனால், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட யோபுவின் வேதாகமப் பகுதியில், 28:25 வசனத்தில் கூறுவதைப் பாருங்கள் : ''அவர் (கடவுள்) காற்றுக்கு அதன் நிறையை நியமித்தார்''

மனிதனுக்கு கொழுப்புச் சத்து கூடுவதே, சர்க்கரை வியாதி உட்பட பல உயிரைப் பறிக்கும் வியாதிகள் உருவாவதற்கு காரணம் என்ற உண்மை சமீபகால மருத்துவத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது என்பதை நாமறிவோம். ஆனால் 3500 ஆண்டுகட்கு முன்னரே வேதாகமத்தின் லேவியராகமம் 3:17

வசனங்களில் இதுபற்றி மிகத்துல்லியமாக கூறப்பட்டுள்ளது. கொழுப்பையோ இரத்தத்தையோ நீங்கள் உண்ணலாகாது. இது உங்கள் உறைவிடம் எங்கும் தலைமுறை தோறும் உங்களுக்கு மாறாத நியமமாக விளங்கும்'' ●

தன்னகத்தே கொண்டுள்ளதை இதோ அருகிலுள்ள படத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மனித உடலின் 95 சதவீதம் பொருட்களான ஆக்ஸிஜன், கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன் ஆகியவை பூமியின் துகள்களிலே கிடைப்பவைதாம்.


உலகில் 70% பரப்பை, கடல் ஆக்கிரமித்துள்ளது. மீதமுள்ள 30% இடத்திலுள்ள மக்கள் ஏறக்குறைய பாதிபேருக்கு சற்று குறைவாக அதாவது 40% மக்கள் கடற்கரையின் அருகாமையில் வசிக்கிறார்கள்.

ஆக, இந்தக் கடல் தனது எல்லைகளைக் கடந்தால்..? நினைத்துப் பார்க்கவே இயலவில்லை அல்லவா? இந்த சமுத்திரத்தை தனது எல்லைக்குள் கட்டிப்போட்டவர் யார்?

வேதாகமம் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறது :-


''அவர் கடலுக்கு எல்லை ஏற்படுத்தி அந்த எல்லையைக் கடல் நீர் கடவாதிருக்கும்படி செய்தார். (நீதி மொழிகள் 8:29) ''எல்லைகளை நான் அதற்குக் குறித்து, கதவையும் தாழ்ப்பாளையும் பொறுத்தி, இதுவரை வருவாய், இதற்குமேல் அல்ல... உன் இறுமாப்பின் அலைகள் இங்கே நிற்க என்று நான் இயம்பினேன்'' (யோபு 38: 89-11 )

வான மண்டலத்தின் ஆராய்ச்சி அன்று ஜோகன் கெப்ளர் தொடங்கி இன்றைய நாளிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் வரை, வான மண்டலத்தின் விரிவை யாராலும் கணக்கிட முடியவில்லை.



உலகுக்குத் தந்தவர் க்ரஹாம் மெண்டல். இவர் கத்தோலிக்க சபையிலுள்ள ஒரு சன்னியாச சபையைச் சேர்ந்த துறவி.


தொலைபேசியாக இருக்கட்டும், ரேடியோவாக இருக்கட்டும் இவற்றில் பலவிமான மாற்றங்களைக் கொண்டுவந்து முழுமையடையச் செய்தவர்தாம் வில்லியம் தாம்சன். கெல்வின், டார்வினுடைய




பரிணாமக் கொள்கைகளை எதிர்த்து, இறைவனுடைய கரம், அவரது படைப்பான வான மண்டலத்திலுள்ளதென விளக்கியவர் இவர். மின்சார உபகரணங்கள் பலவற்றைக் கண்டுபிடித்த இவர், தாம் கண்டுபிடித்த தந்தி உபகரணத்தில் முதன் முதலாக கீழ்கண்ட வாசகங்களை அனுப்பியதிலிருந்து அவரது இறை பக்தியின் அளவு, தெரியவரும். “உலக மக்களுக்கு நல்வாழ்வும் சமாதானமும் கொண்டுவரும் இறைவனுக்கே மகிமை'' என்பதுதான் அந்த வாசகங்கள்!

அணுவைப்பற்றி ஏராளமான ஆராய்ச்சிகள் மூலம் பல உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தியவர்தாம் மேக்ஸ் பளான்க்! இவர் இறைவனைப் பற்றிக்கூறியது, “இறைவன் எங்கும் இருக்கிறார்'' என்பதே.

சுமார் 1300 க்கு மேற்பட்ட கண்டு பிடிப்புகளைச் செய்த சாதனை வீரர்தான் தாமஸ் ஆல்வா எடிசன். இவருக்கு நேரம் மிகவும் முக்கியம். இவருக்கு யாராவது



பாராட்டு விழா கூட்டம் ஏற்பாடு செய்தால், அந்த நேரத்தில் தனது ஆராய்ச்சிக் கூடத்தில் புதிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருப்பார்.




பள்ளிப் பருவத்தில் ஆசிரியரிடம் தகராறு செய்து படிப்பை பாதியில் நிறுத்தியவர், பைபிளை மட்டும் படிக்கத் தவறியதில்லை.

ரயிலில் இரவு வேலைக்காகச் சேர்ந்து அங்கும் சிறிய ஆராய்ச்சிக் கூடத்தை வைத்து, ஒருநாள் பாஸ்பரஸ் கொட்டி அந்த இடம் எரிந்து விட்டது. இதனால் வேலையை இழந்த பின்னர், ரயில்வே ஸ்டேஷனில் தண்டவாளத்தல் தவறி விழுந்த ஒரு அதிகாரியின் மகனைக் காப்பாற்றப் போய் மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்பட்டார்.

ரயிலில் எலித் தொல்லை தாங்க முடியவில்லை. விளைவு? எலியை செயலி ழக்கும் கருவி கண்டுபிடிப்பு!

உலகின் முதல் மின் விளக்கைக் கண்டுபிடித்தவர் இவரே. உலகின் முதல் கிராம போன் என்ற இசைக் கருவியைக் கண்டுபிடித் தவரும் இவரே. உலகின் முதல் திரைப்படக் கருவியையும் இவர் கண்டு பிடித்தார்.






“மேற்கொண்டு”

“போதும் டயானா! இனி நாளைக்கு... ஆனால் இவ்வளவு விஷயத்தை இவ்வளவு குறுகிய நேரத்தில் தெரிந்துகொண்டாயே! என்றாள் அன்னம்மா.”

“போங்கக்கா... இதற்குப் போயி“

நாணைத்தால் டயானா சொன்னாள் “அக்கா நீங்க சொன்னது சரிதான் கிறிஸ்தவர்கள் இல்லையென்றால் இந்த உலகமில்லை.”



# யோகா தினத்திற்கு யோகம்

யோகா என்பது ஒரு உடற்பயிற்சி நிலை. ஒழுங்காக கடை பிடித்தால் நல்லது. முறையற்ற விதத்தில் கடைபிடித்தால் உடலுக்குக் கெடுதி. இவ்வளவு உடலை வருத்திதான் இந்த நன்மைகளைப் பெற வேண்டுமா என்கின்றார் ஒரு சாரார்?

நமது பிரதமர் நரேந்திர மோடி உலகமெங்கும் பறந்து, யோகா தினததின் பெருமைகளை எடுத்தக் கூறுவதால் இப்பொழுது உலக முழுவதும் ஒருசில நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டாலும் இந்தியாவில் பிரமாதமாகக் கொண்டாடு கிறது மத்திய அரசு.

முறையான யோகாவினால் உடலுக்கு நன்மை என்பதில் சந்தேகமில்லை என்கின்றனர் ஒரு சாரார்.

ஆனால், யோகாவினால் உடலுக்கு ஏற்படும் அபாயாகரமான வியாதிகளினால் பாதிப்பு என்று சமீபகால விஞ்ஞான ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன என்பது தனிச் செய்தி. உஷார்...

---

## சிரிப்பு சிதறல்...

**பாலு**
ஏண்டா அந்த பாட்டில் தலையில் இந்த தடவு தடவுற..?

**வேலு**
டாக்டர் தாண்டா இந்த பாட்டிலைக் கொடுத்து, தலை வளிச்சா தடவுன்னாறு...

**ராமு**
நான் படிக்கும்போது கண்ணாடி போடுவேன்... நீ போடுவாயாடா?

**சோமு**
நீ படிக்கும்போது, நான் ஏண்டா கண்ணாடி போடனும்...

**சர்தார் தனது செக் புக்கை தொலைத்து விட்டார்.**

வங்கி மேலாளர் : ஜி... உங்களது செக் லீப்களில் யாராவது கையெழுத்துப் போட்டு போர்ஜரி வேலைப் பண்ணப்போறான்.... ஜாக்கிரதை...

சர்தார்
இப்படி நடக்கும்னு தெரிஞ்சுதான் நான் எல்லா லீப்லயும் கையெழுத்துப் போட்டு வச்சுட்டேன்...

வங்கி மேலாளர் : !!!...???

# வடக்கன்குளத்தில் காட்சியளித்த பரலோக மாதா!



இயேசுவின் மீட்புப் பாதையில் தானும் பங்கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், இறை மகன் இயேசுவின் ஆசியுடன் உலகின் பல்வேறு இடங்களில் காட்சியளித்து அருள்புரிந்து வருகின்றாள் பரிசுத்த அன்னையான மாதா!

கோடான கோடி அற்புதங்களை அவளை நாடுவோருக்கு உடனுக்குடன் வழங்குவதில்வல்லவர்தாம் இந்த தேவதாய்!

உலகத்தை பாவ வழிகளிலிருந்து மாற்ற, ஜெபம் முக்கியத்தேவை என்று உணர்த்த, தனது விண்ணக மகிமையைத் துறந்து, அடிக்கடி மண்ணகம் வருகிறாள். மொத்த உலகுக்கு தனது செய்தியைவழங்குகிறார். சில நேரங்களில் உலகில் சில பகுதிகளுக்காக செய்தியை வழங்குகிறார்.

ஆனால், ஒரு ஊரின் நன்மைக் காக தனது அபூர்வ காட்சியை வழங்கினார் என்றால் நமக்கு தெரிந்து அந்த வட்டத்தில் வடக்கன்குளத்தில் மட்டும்தான்!

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுக்காவில், காவல்கிணறு விலக்கை யடுத்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது வடக்கன்குளம். ஒன்றல்ல... இரண்டல்ல... சுமார் 12 கத்தோலிக்க கிறிஸ்தவக் கோயில்களை உள்ளடக்கிய முதல்நிலை ஊராட்சிதான் இந்த வடக்கன்குளம்.

ஆக, 1803 ஆம் ஆண்டு அக்டோபர் 23-ம் தேதி அந்த அதிசயக் காட்சி, கோயிலின்



# களைகட்டும் அந்த அக்டோபர் 23-ம் தேதி





காட்சி கொடுத்த பரிசுத்த பரலோக மாதாவின் திருவிழா, ஒவ்வொரு ஆகஸ்டு மாதமும் 15-ந் தேதி தேர் சகிதமாக கோயில் முழுவதுமே வண்ண விளக்குகளால் அழகுற அலங்கரிக்கப்பட்டு இவ்வாறாக சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாதாவின் இந்த மகிமை, அவள் காட்சி யளித்த அக்டோபர் மாதம் 23-ம் தேதியன்று, வடக்கன்குளத்தில் கோலாகலமாகக் கொண்டா டப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட பங்குமக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். காலையில் திருப்பலி தொடங்கி, மாலை வரை நிகழ்ச்சிகள் தொடர்கின்றன.

எல்லா நிகழ்ச்சிக்கும் முத்தாய்ப்புதான் மதியம் நடைபெறும் சமபந்தி அமர்வு! அன்றைய தினத்தின் ஒரு வீடு தவறாது, வடக்கன்குளம் மக்கள் அனைவரும் அங்கு வந்து அந்த மதிய உணவை ருசிக்கிறார்கள் என்ற செய்தி, அவர்கள் அன்னை பால் கொண்ட அன்பைத்தான் உணர்த்துகிறது.

பங்குத்தந்தை **ததேயுஸ் ராஜன்** அடிகளார் ஆசியுடன் நடைபெற்ற கடந்த வருட நிகழ்ச்சி யிலும் உற்சாகத்துக்கு குறைவில்லை! சென்னை யிலிருந்து வடவை வந்து மதிய உணவு ஏற்பாடு களை வருடா வருடம் செய்து வருகின்றார் புஷ்பராஜன். இந்த அற்புதமான நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற மாதா அருள்வார் என்பது நிச்சயம்..! ●

உள்ளே பலி பீடத்திற்கு மேல் நடந்தது.

திடீரென்று அருகிலுள்ள அனைத்து சுருபங்களின் முகங்களும் சோகத்தில் காட்சியளிக்க, மாதாவின் சுரூபத்தின் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிந்தது.

இரு கைகளும் ஒன்றோடொன்று ஒட்டியே தயாரிக்கப்பட்ட இந்த பழமை யான சுரூபத்தின் கரங்கள் தாமாகவே விரிந்தன. சுற்றிலும் மேகக் கூட்டங்கள்! இந்த அற்புதக் காட்சியை முதலில் பார்த்தவர் சத்தியவாசகன் என்பவருடைய மகனாகும்.

ஊர் மக்கள் கூடினர். முழங்காலிட்டு ஜெபித்தார்கள். அப்போது ஐரோப்பா கண்டத்திலிருந்து திருயாத்திரையாக வந்திருந்த திருமதி. ஹென்றி என்கிற மூதாட்டியும் இதனைக் கண்டு பரவச மடைந்தார். பக்தர்கள் பலர், பலிபீடத்தின் மேலே பயபக்தியுடன் ஏறி, கண்ணிலிருந்து வழியும் நீரை துடைத்துப் பார்த்தார்கள். அப்பொழுதும் கண்ணீர் வடிவது நிற்கவில்லை.

கோயில் மணி அடிக்கப்பட்டு ஊர் மக்கள் அனைவரும் கூடி தனது மார்பிலடித்து தனது




பாவப்பிழை களுக்காக ஒருசேர மன்னிப்பு கேட்கும் வகையில் ஜெபமும் பாடலுமாக உருகி நிற்க கொஞ்சங் கொஞ்சமாக குவிந்த கைகள் மூடிக்கொள்ள, கண்ணீர் வடிவதும் நின்றது.

ஒட்டிய நிலையில் செய்யப்பட்டிருந்த கரங்கள், இன்றுவரை ஒரு சிறிது திறந்த நிலையிலேயே இருப்பது வடக்கன்குளம் மக்களின் பாவ அளவைக் காட்டவே என்று கூறுகின்றனர் விவரமறிந்தவர்கள்.



கிறிஸ்தவர்களிடையே ஏற்படப்போகும் பெரிய பிளவினை எண்ணி, மாதா அழுததாகக் கூறுவர். ( அதுபோலவே, அந்த துர்ச்சம்பவங்கள் நிகழ்ந்தன என்பது வேறு விஷயம் )

பரலோக அன்னை என்று அதுவரை அழைக்கப்பட்ட அந்த அன்னை, அதுமுதல் புதுமைப் பரலோக அன்னை யென அழைக்கப்படுகின்றார் என்பது நிதர்சனம். இந்த அன்னையின் திருவிழா ஆகஸ்டு மாதம் 6-ம் தேதி தொடங்கி 15-ம் தேதி வரை நடைபெறுகிறது.

திருவிழாவுக்கு பக்தர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் 14-ம் தேதி இரவில் கூடுகிறார்கள். குறிப்பாக கேரளாவின் பல பகுதிகளிலிருந்து இங்கு வருகின்றார்கள். வார நாட்களில் கூட குறிப்பாக சனிக்கிழமைகளில் ஏராளமான திருயாத்ரிகர்கள் சுற்றுப்பகுதிகளிலிருந்தும் கேரளாவிலிருந்தும் இத்திருத்தலத்திற்கு வருகைதந்து ஆசிபெற்றுச் செல்லுகிறார்கள்.

வடக்கன்குளத்தில் மாதாவின் திருவிழா குடும்ப விழாவாக பத்து தினங்களிலும் கொண்டாடப்படுகிறது என்பது கூடுதல் சிறப்பு.

# உலக முழுவதும், மாதா காட்சிகள்



மெக்ஸிகோ நாட்டில்
குவாடலூப் மாதா



பிரான்ஸ் நாட்டில்
சலேத் மாதா



பிரான்ஸ் நாட்டில்
போன்ட்மெயின் மாதா



போர்ச்சுக்கல்லில்
பாத்திமா மாதா



இத்தாலியில்
லொரேட்டோ மாதா



மெக்ஸிகோவில்
அகோட்லான் மாதா



பிரான்ஸ் நாட்டில்
போன்ட்மெயின் மாதா



ஸ்பெனில்
சரகோசா மாதா



போலந்தில்
கீட்வால்ட் மாதா



இடைவிடாத
சகாய மாதா



அயர்லாந்தில் “தட்டு’வோருக்கான மாதா

# ஒருசில... பட ஆல்பம்...



பெல்ஜியத்தில்
பேனக்ஸ் மாதா



போஸ்னியா நாட்டில்
மெட்ஜுகோரே மாதா



ஜப்பானில்
அகிதா மாதா



ஜெர்மனியில்
உபகார மாதா



இத்தாலியில்
கண்ணீரின் மாதா



லூதியானாவில்
உதயத்தின் மாதா



வேளாங்கண்ணியில்,
வேளாங்கண்ணி மாதா



லூர்து மாதா




# இந்துமத வேத புராணங்களில் இயேசு கிறிஸ்து.!

**நீகாக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு''**

அதுபோலவே அவரவர் மதம் அவரவருக்கு பெரிதுதான்!

பட்டுத் தெரிந்தால்... அல்லது ருசித்துத் தெரிந்தால் மட்டுமே ஒருவன் தனது மனதை மாற்றிக் கொள்வான். அப்படியிருக்க, இனிவரும் கருத்துக்களை ஒருவனை "மனம் திரும்ப'' உபயோகப்படுத்த நாம் விரும்பவில்லை. அதற்கு வேண்டுமென்றால் இப்புத்தகத்தின் பிற கட்டுரைகளையும் பார்த்து யாரும் தெரிந்து கொள்ளலாம்.

இந்து மதம் என்பது ஒரு கடல்...

அதனைப்பற்றி நல்லதாகச் சொல்லவோ, விமர்சித்துச் சொல்லவோ கூட நாம் இங்கு வரவில்லை.

"தனது மதத்துக்கு ஒரு துளியும் சம்பந்தமில்லாத அவர்கள் பாணியில் சொன்னால் மேனாட்டு மதம்" தோன்ற காரணமான இயேசு கிறிஸ்துவைப் பற்றி, ஏன் இங்கு ( இந்த வேதங்களில் ) அடிக்கடி வருகிறது'' என்பதுதான் நமது கேள்வி.

இந்தக் கேள்விக்கான பதிலை தேடு வதற்கான ஆராய்ச்சியில் இறங்குவதற்கும் இப்பொழுது இயலவில்லை.

இயேசுவைப்பற்றி இந்த சுலோகங் களில் ஏன் வருகிறது... எப்படி வருகிறது... எதற்காக வருகிறது என்பன போன்ற விஷயங்களுங்கூட இங்கு அசலப்படப் போவதில்லை.

ஆனால் -, இயேசுவைப் பற்றி என்ன வருகிறது என்பதை மட்டுமே நாம் இந்த தொடர் கட்டுரையில் பார்க்கப் போகிறோம்...

**''ஓம் கன்னி சுத்தாய நமஹ''** - கன்னியின் வயிற்றில் பிறந்தவரே. உம்மை நான்

போற்றுகிறேன்.

**“ஓம் பஞ்சகாயாக நம”** - தன்னுடைய உடம்பில் ஐந்து காயங்களைப் பெற்றவரே உம்மைப் போற்றுகிறேன்.

**“ஓம் விருட்ச சூல அர்த்தாய நமஹ”** - சிலுவை மரத்தில் தொங்கியவரே உம்மைப் போற்றுகிறேன். உபநிஷ்த 1 : 1-3

வானத்தையும் பூமியையும் படைத்த எல்லாம் வல்ல இறைவன் "நான் உலகத்தையே படைத்துவிட்டேன். இந்த உலகத்தை எவ்வாறு காப்பாற்றுவேன். அதற்கென உலக ரட்சகரை படைக்க வேண்டுமே” என்று நினைத்தார்! தானே மனிதனாக உலகுக்கு வந்தார்.

**“யேஷ்மூர்த்தி பரப்த நித்ய சுத்த ஷிவகளி, ஈஷா மசி இட்டிச்சமாம நாம ப்ரதிஷ்டம்“** - இது பவிஷ்ய புராண நூல்களில் பாரதக்கந்த் பகுதியில் காணப்படும் வசனங்கள்.

ஆதிஅந்தமில்லா இறைவன் பரிசுத்தமானவர். இரக்கமுள்ளவர், மனிதனுக்கு. மீட்பை அளிப்பவர், ஒவ்வொருவரின் மனதிலும் குடியிருப்பவர் அவரது பெயர் இயேசு (ஈஷா) கிறிஸ்து (மஷி)

**“பல்வான் ராஜா கவ்ரங் ஸ்வேதா வஷ்ட்ரகம் ஈஷ் புத்ரா, குமரி கர்பா சம்பவம் அன்ட் சத்ய வர்ஷ பாராயணம்“**

உலகையாளும் ராஜாவும் இறைவனின் குமாரனுமான அவர் கன்னியின் வயிற்றில் பிறந்து உண்மையின் வழியை உலகுக்கு காட்டுவார்.

**“ப்ரஜாபதி தேவபயம் ஆத்மானம் யக்னைம் க்ருத்திவ பிராய்ச்சித்தாஹ...”**

உலகின் பாவங்களுக்காக கடவுள் "தன்னைத்தானே தியாக பலியாக ஒப்புக் கொடுத்தார்.

**“சர்வபா பரிகார ரக்தப்ரகாஷ நம வஷ்யம் தட்ரக்தம், பரமத்மேவ புண்யதான பலியாகம்“**

பாவம் தீர இரத்தம் சிந்துதல் அவசியம். இந்த இரத்தம், இறைவனே தன்னை தியாக பலியாக



ஒப்புக் கொடுப்பதன் மூலம் சிந்தப்படுகிறது.

**“ப்ரஜாபதியக்னஹ...”**

கடவுளே தன்னை தியாகமாக்கினார்.

அதர்வவேதம் 13 : 3,4 **“கோவ்மரா லோக அஜானிஷ்ட புத்ர ன்வர்வேதன் வாய் உதர்வத்”**


உலகத்திலுள்ள கன்னியிடமிருந்து ஒரு மகன் பிறப்பான். மாட்டுக் கொட்டிலில் பிறக்கும் அவர் மனித மகானாகவும், உலகத்தையே ஆளுபவனாகவும் இருப்பான் என்பது இதன் பொருள். இதே வாசகம் ரிக் வேதம் 355-1 வசனத்திலும் காணப்படுகிறது.

**- தொடரும்.**

**- மு.சேவியர் சந்திரகுமார்**

# எங்கும் இயேசு...
# எதிலும் இயேசு...

















தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான், என்பார்கள். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது அனுபவ மொழி! எதை மனதில் வைத்துப் பார்க்கிறோமோ, அதே தோற்றத்தை பார்த்தது மாதிரியான பிரம்மை நமக்கே கூட ஏற்படுவதுண்டு.

அதுபோன்ற ஒன்றா, இந்த இயேசுவின் உருவங்கள்?

மாதா, இயேசு தவிர வேறு “கடவுளின்” உருவங்கள் இயற்கைக்குத் தெரியாதா?

உலகமெங்கும், பல்வேறு இடங்களில், பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு மக்களால் எடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இயேசு, மாதா புகைப்படங்கள் இணைய தளத்தில் நிரவிக் கிடக்கின்றன.

அவற்றில் வெகுசில உங்களது பார்வைக்கு...

சர்ச்சை-1

# எது சரி... மணி மண்டப சர்ச்சை...



முன்னாள் இந்திய குடியரசுத் தலைவரான அப்துல் கலாமுக்கு மணி மண்டபம் அமைத்து அசத்தியுள்ளது மத்திய அரசு. இஸ்லாமியரான அவரது சிலையின் அருகில் பகவத் கீதையை மட்டுமே வைத்து, தனது ''ஆசைகளை'' ''வழக்கம்போல'' நிறைவேற்றிக் கொண்டது அரசு. சர்ச்சைகட்டு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் அப்துல் கலாமின் பேரன் தைரியத்துடன் உள்ளே நுழைந்து பகவத் கீதை அருகில் பைபிள், குர்ஆன் ஆகிய வேத நூல்களையும் வைத்தார். ஆனால் அவற்றை ஒரே நாளில் நீக்கிவிட்டு, தற்சமயம் பகவத் கீதை மட்டும் உள்ளது. தனது வாழ்நாளில் நல்லதையே செய்து, வாழ்ந்து காட்டியவருக்கு இப்படியா அஞ்சலி செலுத்துவது என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

சர்ச்சை-2

# கையைப் பிடிக்கிறார்களா? முறுக்குகிறார்களா?



எப்போதுமே உலகின் ''பெரியண்ணனாக'' இருக்க வேண்டும் என்பதே அமெரிக்கர்கள் அதிபர்களின் கனவு. இந்தக் கனவில் மண்ணைப்போடுமளவுக்கு அமெரிக்க அதிபர் டிரம்புக்கு சமமாக தனது பலத்தைக் காட்டி கடும் போட்டியை ஏற்படுத்தி வருகிறார் ரஷ்ய அதிபர் புட்டின்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்கும் முயற்சியில் இருவரும் இணைந்து அசத்தினர். வெற்றியும் பெற்று வருகின்றனர். அடிக்கடி இதற்காக சந்தித்து ஒருவருக்கொருவர் கைகளைக் குலுக்கிக் கொண்டு போஸ் கொடுப்பது இவர்களது வழக்கம்.

சமீபத்தில் ரஷ்யா மீது தேவையற்ற பொருளாதார தடைகளை விதித்தார் டிரம்ப். சும்மா இருப்பாரா புட்டின்? தனது நாட்டில் வெளிநாட்டு தூதுவர்களாக பணிபுரிந்த 1000 அமெரிக்க அதிகாரிகளுள் 755 பேரை நாட்டை விட்டே ஒரே நாளில் விரட்டி விட்டு பழி தீர்த்துக் கொண்டு விட்டார் புட்டின். இனிவரும் காலங்களில் இவர்கள் சந்தித்தால் கையை குலுக்குவார்களா..? முறுக்குவார்களா..?

# 24 மணிநேரமும் 27 எப்.-எம். அலைவரிசைகள்



நவீன காலத்தின் அதிசயம் தான், ஒவ்வொருவரின் கைகளிலே தவழும் அன்ட்ராய்டு ஸ்மார்ட் போன். தரமுள்ள போனில் ஏராளமான "ஆப்' வசதிகள் உள்ளன. இந்த "ஆப்' மூலம் வங்கிகளுக்கு சென்று பணம் அனுப்பும் நேரம், பிரயாணச் செலவுகளை மிச்சப்படுத்தி, இருந்த இடத்திலே இருந்து பண பரிவர்த்தனை செய்ய முடிகிறது என்பது ஆறுதலான செய்தி! தவிர பிரயாண முன் பதிவுகளையுங்கூட இந்த ''ஆப்''கள் மூலம் செய்து விட முடியும்.

அதுபோல நேரத்தையும் மனதையும், பணத்தையும் விரயமாக்கும் ஏராளமான மனிதனை உழைக்கச் செய்யவிடாத பொழுதுபோக்கு அம்சங்களுக்கான வசதிகளுக்கும் இந்த வகையான போன்களில் குறைவில்லை.

பொழுது போவதற்கான நல்ல அம்சமொன்றை இந்த ஆன்ட்ராய்டு கைபேசி மூலம் பெற முடியும். அதுதான் "Tamil Christian App" அதாவது, இயேசுவின் வானொலி "ஆப்' இதை டவுன்லோடு செய்து வைத்துவிட்டு உள்ளே நுழைந்தால் அப்பப்பா, ஏராளமான எப்.எம், கிறிஸ்தவ வானொலிகள் உள்ளன. ஒன்றல்ல, இரண்டல்ல, 27 எப்-எம்.வானொலிகள் மூலம் 24 மணி நேரமும் விதவிதமாக கிறிஸ்தவ கீதங்கள்.

அவற்றுள் ''லூமினஸ்' எப்-எம். மாதா பாடல்களையும் இசைக்கிறது. இதோ எம்.எம்.களின்

பெயர்கள் : **லூமினஸ், ஸ்வீட்டி, இவாஞ்சல், விடுதலை, கலீட், ஜிஎஸ்.சி., வல்லமையின் தொனி, இன்பம், ஜீசஸ், என்ஜேசி, டொரண்டோ, திவ்யம், தேஜஸ், கிருபை, மன்னா, ப்ளஸ் லங்கா, நித்ய ஜீவன், ஜோயல், ஜெயம், ஜீசஸ் ரெடீம்ஸ், ரூவா, ஜே.டி.எம், அருள்வாக்கு, டி.சி.பி.என், சையான், தமிழ் கிறிஸ்டியன் ரேடியோ ஆகியவை. தேனிசையைப் பருகி பயன்பெறுவோம்.**

---

**சயின்ஸ் மாஸ்டர்**
எந்த திரவத்தை சூடாக்கினால் திடப் பொருளாக மாறும்?

**மாணவன்**
இட்லிக்கு அரைத்த மாவு சார்...

**ஆசிரியர்**
ஆல மர இலை பத்து,
அரச மர இலை பத்து,
பூவரசமர இலை பத்து,
கூட்டினால் எத்தனை வரும்?

**மாணவன்**
குப்பை வரும்!

**அப்பா**
அம்மா அடிச்சதுக்கு ஏண்டா அழுகிற?

**பையன்**
சும்மா இருங்கப்பா! உங்கள மாதிரி என்னால அடியைத் தாங்க முடியாதுப்பா...

– சிரிப்பு எழுத்தாக்கம்
**A. தோமஸ்,** குரோம்பேட்டை, சென்னை.




# ஏற்றத்தை நோக்கிய மாற்றம் கேளம்பாக்கத்தில்...



சிங்காரச் சென்னை!
அதென்ன சிங்காரம்?

தமிழகத்தின் தலைநகரை சிங்காரமாக அலங்கரித்து, அதன் அழகைப்பார்க்க தமிழன் விரும்பியதால்தானே சிங்காரச் சென்னை என்றழைத்தான்? ஆயிரம் நகரங்கள் தமிழகத்தில் உண்டு! அதில் பல்லாயிரம் தெருக்கள் உள்ளனதான்! ஆனால், ரங்கநாதன் தெரு போன்ற ஒரு தெருவை நீங்கள் பார்த்ததுண்டா? ஒன்றுமில்லை ஜனசமுத்திரம்தான் அதன் பெருமை!

பிரமாண்டமான பாலங்கள்! ஆசியாவிலேயே நீளமான மெரினா கடற்கரை! தமிழக அரசியல் தலைவர்களது நீங்கா துயிலிலாழும் நினைவிடங்கள்.! பயணிகளின் நெருக்கடியுடன் நேர்த்தியாக அமைந்த சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும் கோயம்பேடு பஸ் நிலையம்!

வியாபாரிகள் சங்கமித்து வியாபாரம் களைகட்டும் கோயம்பேடு மார்க்கெட்! அடையாறு தொடங்கி மகாபலிபுரம் வரையிலான தங்குமிடங்கள் பொழுது போக்கு அம்சங்கள்!

ஆனால் இத்தனை மேற்கூறிய சிறப்புகள் கொண்ட இடங்களின் சாலைகளின் விரிவு,



பத்து வருடம் முன்பு இந்த சாலையும் இடங்களும் வெறும் கட்டாந்தரை!

ஆனால் இன்றோ நாளைய சிங்கப்பூர்!

அத்துணை பெருமைமிகு இடத்தில் அமைந்ததுதான் கேளம்பாக்கம்!

இந்தக் கேளம்பாக்கத்திலமைந்ததுதான் கிறிஸ்து மீட்பர் ஆலயம்!

அருகிலமைந்துள்ள கோவளத்தை தலைமையிடமாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் வசிக்கும் கிறிஸ்து மீட்பர் ஆலயப்பகுதி, அப்படி ஒன்றும் அன்றோ, இன்றோ பெரிய செல்வச் செழிப்பு ன்ற ஒன்றில்லை!

ஆனால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இந்த இடத்தில் பெருகி வருவதால்தான் தனிப்பங்காக மாறியது!

ஏற்கெனவே ஏழு வருட முன்பு அமைக்கப்பட்ட எழில்மிகு புதிய கோயில், ஒருசில கட்டட கட்டுமானப் பிழையால் இடிக்கப்பட வேண்டிய சூழ்நிலை.

ஏற்கெனவே கட்டப்பட்ட கோயிலை நீர்மானித்ததே பெரிய ஆச்சரியம்!

அடிக்கப்பட்ட வண்ணங்கள் மங்கக்கூட இன்னும் ஆரம்பிக்காத வேளையில் மீண்டும் ஒரு

கோயில் சாத்தியமா?

யாருமே எதிர்பார்த்திராத வகையில்

தூய்மைத்தனம் ஆகிய சிறப்பை வைத்து எடைபோட்டால்...?

சென்னை தேறுமா?

சந்தேகம்தான்...

சிங்காரச் சென்னை என்று சொன்னால் முழுக்க முழுக்க உண்மையா...?

உண்மைதான்... அதுதான் ஞகத என்றழைக்கப்படும் அடையார் தொடங்கி மகாபலிபுரம் வரை

செல்லும் சுமார் 40 கி.மீ. தூரமுள்ள பழைய மகாபலிபுரச் சாலை..!

சாலையின் இருபுறமும் வானோங்கிய எழில்மிகு கட்டடங்கள்..!



# என்னதான் நடந்தது... கோளம்பாக்கத்தில்...

படிப்பினை -1

## அப்பா என்று என்னைஅன்போடு மகனாகிய நீ கூப்பிட்டால் இன்பத்திலும் துன்பத்திலும் உன்னை வழி நடத்துவேன்

நீங்கள் அவருடைய பிள்ளைகள். அவரை நீங்கள் அப்பா என்று கூப்பிடுவதற்கான ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள்ளே அனுப்பி அவ்வாறு அப்பா என்று கூப்பிடச் செய்கிறார். **(கலா 4:6)** அந்த உன்னதமான தந்தையை முழு மனதுடன் அன்பு செய்ய வேண்டுமா? அப்படி யானால் உலக நாட்டங்களில் அன்பு செலுத்து வதை தவிருங்கள். **(1 யோவான் 2:15)** இவ்வாறான அன்பை நீங்கள் அவருக்கு செலுத்தும்பொழுது, அவரது திட்டம் நிறைவேறும் வகையில், அதே நேரத்தில் உங்களது நன்மைக்கேதுவாக அனைத்தும் நடக்கும்படி அவர் ஒத்துழைக்கிறார். **(ரோமர் 8:25)** மட்டுமல்ல! பெரும் சுமை சுமந்து சோர்வுற்றிருக்கிறீர்களா? இதோ என்னண்டை வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' **(மத்தேயு 11:28)**

படிப்பினை -3

## என்னுடைய ராஜ்ஜியத்தில் நுழைய ஞானஸ்நானம் என்ற தகுதி வேண்டும்

''ஒருவன் மறுபடியும் பிறந்தாலன்றி என்னுடைய ராஜ்ஜியத்திற்கு வர இயலாது. மனிதராய் பிறப்பவர் மனித இயல்பு உடையவர், தூய ஆவியால் பிறப்பவரே தூய ஆவியின் இயல்புடையவராக முடியும். ஆகவே தூய ஆவியில் பிறந்த எனது ராஜ்ஜியத்தில் நுழைய தண்ணீராலும் தூய ஆவியிலலும் ஞானஸ்நானம் மூலம் மறுபடியும் பிறக்க வேண்டும்''

(யோவான் 3: 1-8)

படிப்பினை -2

## விண்ணரசுக்குள் நுழைய நான் ஒருவனே வாயில்! வாயில் திறந்திருக்கும்போது நுழைந்தால் மட்டுமே பிழைப்பீர்கள்!

அரசர் ஒருவர் தனது மகனுக்கு திருமணம் நடத்தினார். விருந்து சாப்பிட்டு தன்னுடைய ச்நதோஷத்தில் பங்கு பெற வேண்டி, அழைப்புப் பெற்றோரை அழைத்து வரும்படி தனது பணி யாளரை அனுப்பினார். (மத்தேயு 22-1,2,3) ஆனால் அவ்வாறு வருந்தி அழைத்த பின்னரும், யாரும் வரவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாக்குப் போக்கு சொல்லி வருவதை தவிர்த்தார்கள். (லூக்கா 14:18) கூப்பிடும்பொழுது ஒரே வாயிலாக வந்தால் மட்டுமே, வாயில் திறக்கும், தவற விட்டால் அது திறக்காது'' (யோவான் 10:3)

படிப்பினை -4

## எனது குழந்தைகளான நீங்கள் கணவன் மனைவியாக இணைந்த பின்னர் துரோகம் செய்யலாமா?

ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொண்டவர்களாக கணவன் மனைவியர் வாழ வேண்டும். இதன்மூலம் நீங்கள் தூயவர்களாக இருப்பது மட்டுமின்றி உங்களது பிள்ளைகளும் தூயவராகிறார்கள். (1 கொரி 7:14) உங்களது திருமணத்திற்கு உங்களது இளமையில் கர்த்தராகிய அவரே சாட்சியாயிருந்தார். உனது மனைவியாகிய அவருக்கு நீ நம்பிக்கை துரோகம் செய்து விட்டு அவருக்கு நீ காணிக்கை செலுத்தி வருகிறாய். அவர் ஏற்றுக்கொள்ளாததால் அழுகிறாய்.உங்கள் வாழ்வுக்கு ஆவி தந்து ஒன்றாய் இணைந்தவர் அவரே! அப்படியிருக்க ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள் (மலாக்கி 2 : 21, 13-15)

நீங்கள் மேலே பார்ப்பது வெறும் நான்கு படிப்பினைகளே. இதுபோன்று நூற்றுக்கும் மேற்பட்ட படிப்பினைகள்..! எல்லாமும் பைபிளிலுள்ள வாசகங்களைக் கொண்டவையே



என்பதுதான் இதில் சிறப்பு.

சுமார் 76 புத்தகங்கள் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் வைத்து எழுதப்பட்டு அதன் தொகுப்பே வேதாகமமான பைபிள். இந்த வேதாகமத்தின் எந்த பகுதியிலுள்ள வார்த்தைகளும், சம்பவங்களும் வேறு எந்த பகுதியோடும் சம்பந்தப் பட்டிருக்குமே தவிர முரண்பாடு எங்குமில்லை.

அப்படிப்பட்ட சிறப்பு கொண்டதால்தான், மேலே கண்டபடி சம்பவங்களின் நிறைவை, வெவ்வேறு புத்தகங்களின் வெவ்வேறு வசனங்களில் காண முடிகிறது. இதற்கு மேற்கூறிய நான்கு படிப்பினைகளே சாட்சி!

இவ்வாறாக தொகுக்கப்படும் நிகழ்வில் பங்கு கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு எப்போதேனும் கிடைத்துள்ளதா? கேளம்பாக்கம் பங்கு மக்களுக்கு கிடைத்தது!

வாழ்வின் நடைமுறையை பைபிள் விளக்குவதை, தகுதி வாய்ந்த ஒருவர், ஒருபடி மேலே போய் புரியும்படி விளக்கம் கொடுத்தால், அது எப்படியிருக்கும்?

அதுதான் அங்கு நடந்தது!

ஆறுநாள்... தினமும் ஆறு மணிநேரம்...!

வேலைகட்கு அவரவர் போகும் முன்பும் திரும்பி வந்த பின்புமாக, கச்சிதமாக நேரத்தை வகுத்து அவ்வளவு சிறப்பாக நடந்தது இது.

ஆம்... தியானம்! பாப்புலர் மிஷனால் நடத்தப்பட்ட தியானம்.

எங்கெங்கோ, யாராலோ, எதெதற்கோ, தியானங்கள் நடத்தப்படலாம்.

ஆனால் தியானம் என்பது மாற்றத்தையும் அதன்மூலம் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதாக அமைந்தால் மட்டுமே, அது உண்மையான தியானமாக இருக்க முடியும்.

இந்த தியானம் எப்படி ?

கேளம்பாக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் இதற்குச் சான்று!

*இயேசுவின் கடைக்கண் பட்டதோ, என்னவோ தெரியவில்லை!*

*ரோமாபுரியில் காணப்படும் கட்டட நேர்த்தியுடன் ஆலயம் அமைய திட்டமிட்டனர் மக்கள், பங்குத்*

*தந்தையுடன் சேர்ந்து!*

*தலை ஒழுங்காக இருந்தாலே உறுப்புகளும் நன்றாக இருக்கும்?*

*அருட்திரு* **ஸ்டீபன் அடிகளார்** *தலைமையில் அமைக்கப்பட்டன பல்வேறு குழுக்கள்.*

*கட்டடக் கமிட்டி என்ற குழு அதிலுள்ள முக்கியக் குழு!*



ஆலயம்
இவ்வாறுதான்
எழுந்தது, மக்கள்
பங்கேற்புடன்







அஸ்திவாரத்திலிருந்து கட்டட அடித்தளம் வரை சகலமும் பங்கு மக்கள் உழைப்புடன் இலவசமாக செய்து முடிக்கப்பட்டது (படம் 2, 3,4)

அந்தக் கட்டடக் கமிட்டியின் செயலர் என்ற முறையில் மற்ற தலைவர்கள் ஒரு சேர, ஒருசில நாட்களுக்கு முன்னர் கேளம்பாக் கத்தின் உட்பகுதிக்குச் செல்ல நேரிட்டது!

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் நான் கேளம்பாக்கத்துக்கு வந்ததிலிருந்து கடந்த மாதம் வரை பார்த்திராத ஒரு திடீர் மாற்றத்தை, அந்த இரவு வேளையில் நாங்கள் பார்க்க நேரிட்டது.

அதுதான்... ஏராளமான வீடுகளிலிருந்து புறப்பட்ட மக்களின் ஒருமித்த பாடல் சத்தம்..!


ஆம்.... குடும்ப ஜெபம்....!

ஆங்காங்கே தனிப்பட்ட வீடுகளில் குடும்பமாக, குழுக்களாக ஜெபங்கள் நடந்தன.

இதற்கு முன்னரே கூட இவை, ஒருசிலவாக நடந்திருக்குமென்றாலும், இப்பொழுது ஏற்பட்டுள்ள திடீர் பக்திப் புரட்சிக்கு காரணம்தான் என்ன?

மிகச் சமீபத்தில் நடைபெற்ற பாப்புலர் மிஷன் தியானம்தான் இதற்குக் காரணம்.

வாழ்க... வளர்க... கேளம்பாக்கம்.



இவ்வாறு
எழ வேண்டும்...
உங்கள்
பங்கு?

Owned and Published by M. Xavier Chandrakumar from 1/448, Pillaiyar Koil Street, Kelambakkam, Kanchipuram Dist., - 603 103. and Printed by Syed Azamadullah, at Sharp Printers, 324, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor. **M. Xavier Chandrakumar**